102321

சங்கரநயினார் கோயில் அந்தாதி
(குறிப்புரையுடன்)

O-12M.5
N69
102321

102-321

சாங்கர நயினார் கோயில் அந்தாதி
(குறிப்புரையுடன்)

வெளியீடு எண் 42.

சங்கரநயினர்கோயில் அந்தாதி

[குறிப்புரையுடன்]

1143
70

O-,12N,5
N69
102321

விடைமருதூர்
சுவாமி தேவஸ்தானம்
1969

வெளியீடு எண் 42.

உ

சிவமயம்

சங்கரநயினார்கோயில் அந்தாதி

[குறிப்புரையுடன்]

இஃது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

வெளியிடப்பெற்றது.

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம்

வசந்தோற்சவத்

திருக்கல்யாண விழா வெளியீடு

27—5—1969

TAMIL ... LIBRARY
EGMORE, MADRAS
No. 102.321

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —

இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்களின் அகராதி

அகநானூறு 91
அருணைக்கலம்பகம் 28
ஐங்குறுநூறு 89
கந்தபுராணம் 8, 11
கலித்தொகை 60
குலோத்துங்க சோழன் கோவை 81
குறள் 8, 69
குறுந்தொகை 57
குற்றாலக்குறவஞ்சி 77
கோடீச்சுரக்கோவை 2
சிலப்பதிகாரம் 47, 84
சீகாழிக்கோவை 14
சீவகசிந்தாமணி 8, 14, 87, 91
தக்கயாகப்பரணி 81
தனிப்பாடல் 49, 95
திணைமாலை நூற்றைம்பது 20
திருக்குற்றால யமகவந்தாதி 98
திருச்சிற்றம்பலக் கோவையார் 8, 34, 46, 85, 88, 91
திருப்புகலூரந்தாதி 7, 33, 40, 61
திருமயிலைத் திரிபந்தாதி 38, 70
திருவரங்கத்தந்தாதி 46, 74, 79, 94
திருவாசகம் 56
திருவாரூர் நான்மணிமாலை 10
திருவிசைப்பா 13
திருவேங்கடத் தந்தாதி 28
திருவேரக யமகவந்தாதி 75
திவ்: முதற்றிருவந்தாதி 28
தேவாரம் 1, 5, 8, 13, 46, 58
நைடதம் 29
பரிபாடல் 8
பழமலையந்தாதி 8, 94
பாசவதைப்பரணி 34
பிரபுலிங்கலீலை 69
பெருங்கதை 14
பொன்வண்ணத் தந்தாதி 8, 11
மதுரைக்கலம்பகம் 36
மதுரைக்காஞ்சி 47, 65

ஸ்ரீ மகாலிங்கப்பெருமான்

உ

சிவமயம்

முகவுரை

திருச்சிற்றம்பலம்

காரேறு நெடுங்குடுமிக் கயிலா யன்காண்
 கறைக்கண்டன் காண்கண்ணார் நெற்றி யான்காண்
போரேறு நெடுங்கொடிமே லுயர்த்தி னான்காண்
 புண்ணியன்கா ணெண்ணரும்பல் குணத்தி னான்
நீரேறு சுடர்ச்சூலப் படையி னான்காண் [காண்
 நின்மலன்கா ணிகரேது மில்லா தான்காண்
சீரேறு திருமாலோர் பாகத் தான்காண்
 திருவாரு ரான்காணென் சிந்தை யானே.

திருச்சிற்றம்பலம்

—திருநாவுக்கரசுநாயனார்.

பாண்டிநாட்டுச் சிவதலங்களுள் ஒன்றாகிய சங்கர நயினார் கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சங்கர நாராயணப்பெருமான் விஷயமாகப் பாடப்பெற்றது இந்த அந்தாதி என்னும் பிரபந்தமாம். இது கூழையந்தாதி, வரராசையந்தாதி என வழங்குவதாம். கூழை, வரராசை என்பன சங்கரநயினார் கோயிலின் திருநாமங்கள். இந்நூலுக்குக் கூழையந்தாதி வரராசையந்தாதி என்ற பெயர்கள் பிரதிகளிற் காணப்பட்டாலும் தமிழ் நாட்டில் கூழை, வரராசை என்ற பெயர்கள் வழக்கில் அதிகமாக இல்லாமையால் எல்லோருக்கும் எளிதில்

விளங்குமாறு ''சங்கரநயினர் கோயிலந்தாதி'' என்னும் பெயர் புதிதாக அமைக்கப்பட்டது என்பர் மகாமகோபாத்தியாய - டாக்டர் ஐயரவர்கள்.

இத்தலத்திலே ஒரு புற்றில் பாம்பின் திருவுருவங் கொண்டு எழுந்தருளியிருந்த கருணைக்கடலாகிய சிவபெருமான், இங்கே இருந்த காட்டைச் செப்பஞ் செய்யவந்த மணிக்கிரீவன் என்பவனால் வெட்டப் பெற்று வாலற்றுக் கூழையுருவத்தோடு அவனுக்குக் காட்சியளித்தமையின் கூழைப்பிரான் என்னும் திருநாமம் அவருக்கு ஆகிப் பின்பு கூழை என்பது இத்தலத்திற்கும் ஆயிற்று. இதற்கு அருகில் ஓடும் ஆறு கூழையாறு என்று வழங்கப்படும் என்பர்.

ஸ்ரீராசபுரம் என்னும் வடமொழிப் பெயர் ராசை என மருவிற்று; இராசவில்லிபுரத்தின் மரூஉவாகிய ராசை என்பதினின்றும் வேறுபாடு புலப்பட வரராசை என வழங்கப்பெற்றதென்று தோற்றுகிறது என்பர்.

மற்றும், இத்தலம் பாண்டி நாட்டிலுள்ள பஞ்சபூத ஸ்தலங்களுள் பிருதிவித்தலம் என்றும், சிவபெருமானுக்குரிய 64 மூர்த்தங்களுள் ஒன்றாகிய ஸ்ரீ சங்கரநாராயண மூர்த்தத்திற்கு உரிய தலம் என்றும் நூல்கள் கூறும்.

செந்தண்டமிழ் மொழியிலுள்ள தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் அந்தாதியும் ஒன்றாம். அது முதற்செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்து அசை சொல் சீர் அடி முதலியவற்றில் ஏதேனும் ஒன்று

அடுத்த செய்யுளின் முதலில் அமையவும், நூலின் இறுதிச் செய்யுளில் உள்ளது முதற்பாட்டின் முதலாக அமையவும் பாடப்படுவது. அந்தாதி - அந்தத்தை ஆதியாகவுடையது: அன்மொழித்தொகை; வடமொழித் தொடர், தீர்க்கசந்தி. அவ்வாறு நூலின் இறுதிச் செய்யுளின் இறுதியுறுப்பும் முதற்செய்யுளின் முதலுறுப்பும் அமைய வைத்தலை மண்டலித்தல் என்பர்.

அவ்வந்தாதி யாப்புவகையால் பலவாகும். அவை கலித்துறை அந்தாதி, வெண்பா அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி முதலியனவாம். அவற்றுள் திரிபாகவும் யமகமாகவும் அமைந்தவை முறையே திரிபந்தாதி, யமகவந்தாதி என வழங்கப்படும். திரிபைத் திருகல் என்றும், திருக்கு என்றும் கூறுவர். திரிபும் யமகமும் ஒரே அந்தாதியில் கலந்து வருதலும் உண்டு. இவ்வகை நூல்கள் சொற்றொடர் நிலைச் செய்யுளின்பாற்படும். இந்நூலில் (65 முதல் 74, 98) ஆகிய பதினொரு செய்யுட்கள் யமகமாக அமைந்துள்ளன; மற்றவை திரிபு. எளிதில் பிரித்துப் பொருள் காணும்படி செய்யுட்கள் அமைந்திருக்கின்றன.

படிப்பவர்களுக்குச் சொற்றொடரைப் பிரிக்கும் முறை, ஒரு சொல்லின் பல பொருள்கள் பழைய வரலாறு முதலியவற்றை எளிதில் அறிந்துகொள்ளவும், ஞாபகசக்தியை அதிகப்படுத்தவும் தக்க கருவிகளாக இருத்தலின், பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் தமிழ் பயின்றுவரும் மாணக்கர்களுக்குப் பள்ளிக்கூடத்திலே இவ்வந்தாதி நூல்கள் ஆரம்பத்தில் கருவி நூல்களாகக் கற்பிக்கப்பெற்றுவந்தன. திரிபு வகையில் புகலூரந்தாதி, திருவேங்கடத்தந்தாதி முதலி

யவைகளும், யமகத்தில் திருவரங்கத்தந்தாதி முதலியனவும் தமிழ் மாணுக்கர்களால் அங்ஙனம் தொன்று தொட்டுப் பயிலப்பட்டு வருகின்றன. பழமலைத் திரிபந்தாதி, மருதூர் யமகவந்தாதி, தில்லை யமகவந்தாதி, திருவேரகத்து யமகவந்தாதி, துறைசை யமகவந்தாதி, மறைசை யந்தாதி முதலிய பல அந்தாதிகளும் கற்பிக்கப்படும்.

சிலசில அந்தாதிப்பிரபந்தங்கள் சிலசில இடங்களில் மட்டும் பயிலப்படும். திருமயிலைத் திரிபந்தாதி முதலியன மாயூரம் பக்கத்திலும், திருக்குற்றால யமகவந்தாதி போன்றவை திருநெல்வேலிச் சீமையிலும் முன்பு பயிலப்பெற்றன. இந்தச் சங்கரன் கோயிலந்தாதி 70, 80 வருடங்களுக்கு முன்புகூடக் கிடைப்பது அரிதாக இருந்து அங்கொரு பாடல் இங்கொரு பாடலாகச் சிலரிடம் மனப்பாடமாக இருந்ததாம். மகாவித்துவான் பிள்ளையவர்களுக்கு இதில் 'இளந்தென்றலை' என்ற முதற்குறிப்புடைய (9) பாடல் ஒன்றே கிடைத்து அதனை வேறொரு செய்யுளுக்கு மேற்கோளாக எடுத்து விளக்கினார்களாம்.

பின்பு ஆதீன வித்துவானாக இருந்த ஸ்ரீ சங்கரலிங்கத் தம்பிரான், சங்கரன்கோயில் ஸ்ரீ குமரசாமித் தம்பிரான், திருவிடைமருதூர்க் கட்டளை ஸ்ரீ சங்கரமூர்த்தித்தம்பிரான் முதலிய ஆதீனத்துத் தம்பிரான்கள் தமக்குரிய பாராயண நூல்களுள் ஒன்றாக இந்த அந்தாதியையும் நாடோறும் பாராயணம் செய்து வந்தார்கள். அவர்கள் வைத்திருந்த பிரதிகள் யாவும் காகிதக் கையெழுத்துப் பிரதிகளே.

இத்தலச் செய்திகள்

இத்தலத்தில் கோயில்கொண்டு விளங்கும் மூர்த்தி கூழைப்பிரான், சங்கரர், சங்கரேசர், சங்கரநாராயணர், சிவசங்கரேசர், ஆவுடைநாயகர் எனப் பலபடியாக இந்நூலில் பாராட்டப்பெறுவர்: அவற்றை அங்கங்கே காணலாம். சிவபெருமான் இத்தலத்திலே சங்கரநாராயணராக எழுந்தருளியிருத்தலை "துளவக்கண்ணிக் கரும்புயலோர் பாகத்தனே" (70) என்பர். "அம்மாமன்னை ஆவுடை மாதிடம் வைத்தவனே" என்று (77) கூறுவர்.

அம்பிகை திருநாமம் ஆவுடைநாயகி என்பது. அதனை வடமொழியிலே கோமதி என்று வழங்குவர். ஆவுடை, ஆவுடைநாயகி, ஆவுடைத்தோகை, ஆவுடைமாது, ஆவுடையம்மை என்று அம்மையார் திருநாமங்கள் இந்நூலில் பலவகையாகக் காணப்படுகின்றன.

மற்றும், 98-வது செய்யுளில் சங்கரநாரணர் என்னும் திருநாமம் அமைந்துள்ளது. 56வது செய்யுளில் அப்பெருமானுடைய திருவுருவ வருணனையை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

இத்தலத்தின் பெயர்களாகிய கூழை, சீராசை, ராசை, வரராசை என்பவை இந்நூலில் அங்கங்கே வந்துள்ளன. வரராசை என்பது 23வது செய்யுளில் எதுகையில் அமைந்துள்ளது.

தலவிருட்சம் புன்னைமரம்; ஆகலின், இத்தலம் நாகவனம், புன்னைவனமென்றும் வழங்கும். "சினைவா

ரிதயம் நிறைந்திருப்பார் புன்னை நீழலுற்றோர்" (54) எனச் சிவபெருமான் புன்னையின் அடியில் எழுந்தருளி யிருக்கும் செய்தி கூறப்பட்டுள்ளது.

சிவபெருமான் பெருமைகளையும் திருவிளையாடல் களையும் அமைத்துப் பலவகையில் பாராட்டுவார். அன்பர்க் கெளியர் என்பதை 28, 31, 47, 54, 63 எண்ணுள்ளபாடல்களால் அறியலாம். அன்பில்லாதவருக்கு இறைவரரியர் என்பது 7, 63, 76, 89-ம் பாடல்களால் கூறப்பெற்றது. வாவிவளம், பொழில் வளம், நிலவளம், நகரத்தின் செல்வச் சிறப்பு, அத்தலத்திலுள்ளார் அறச் செயல், தமிழாராய்ச்சிசெய்தல் முதலியனவும் நன்றாகக் கூறப்பட்டுள்ளன. சிவபெருமானை வணங்குவோருக்கு யமபயம் இல்லை என்பார். இத்தலத்திலே இறைவரைத் தரிசனம் செய்வோர் இகபர வாழ்வு நன்கனம் பெறுதலையும், பிறப்பினின்று நீங்குவர் என்பதனையும் பயனாகக் கூறுவார்.

தலைவன் கூற்று: 2, 8, 63, 66, 68, 70, 72, 81.

தலைவி கூற்று: 5, 16, 17, 25, 28, 29, 32, 37, 47, 61, 74, 85.

பாங்கி கூற்று: 6, 9, 11, 12, 18, 20, 22, 26, 27, 31, 33, 35, 36, 44, 46, 50, 52, 55, 57, 58, 60, 62, 64, 69, 75, 77, 86, 87, 91, 92, 93.

செவிலி கூற்று: 4, 15, 38, 95.
கைக்கிளை: 84.

நாணிக்கண் புதைத்தல் : 89.
தலைவன் வறுங்களம் நாடிமறுகல்: 54.
பாங்கி வெறிவிலக்கல் : 49.
மிக்கோர் ஏதுக்காட்டல்: 40.
கிளிவிடுதூது : 43.

நாரைவிடு தூது : 21, 82.

தலைவன் கூற்றுக்களுள் வண்டோச்சி மருங்கணைதல் 66. மடலேறத்துணிதல் 72. இடையூறு கிளத்தல் 89. ஐயம் 84 முதலிய துறைகளும்;

தலைவி கூற்றுக்களுள் சந்திரோபாலம்பனம் 17. கிளிவிடுதூது 43. இரவுநீடுபருவரல் 68. காமம்மிக்க கழிபடர்கிளவி 82 முதலிய துறைகளும்;

பாங்கி கூற்றுக்களுள் இரவுக்குறி விலக்கல் 6. நாரை விடுதூது 21. வெறிவிலக்கு 49, 93. உலகியலுரைத்தல் 64. தலைவனை நகுதல் 86 முதலியனவும்;

செவிலி கூற்றுக்களுள் உடன் போக்கின்கண் இரங்கல் 38. தலைவியின்நிலைக் கிரங்கல் 4, 15, 95. முதலியனவும், மிக்கோர் ஏதுக்காட்டலாகிய கண்டோர் கூற்றும் 10 வந்துள்ளன. கூடற்சுழியைப் பற்றிய செய்தி 50-வது செய்யுளில் கூறப்பட்டுள்ளது.

மேலே காட்டப் பெற்றவற்றுள் பொருளிலக்கணத்து அகப்பொருட்டுறைகள் வந்தன காண்க.

பிறதலச் செய்திகளாகிய கல்யானை கரும்புண்ணுதல், வையை மண் சுமத்தல் முதலிய மதுரைத்

திருவிளையாடல்களும், சங்கப்புலவராக இருந்து அத்தலத்தில் தமிழைப் பாதுகாத்ததும் பிறவும் கூறப்பட்டன.

தமிழ்மொழியிலே பற்றும், புலமையும் மிக்க இவர் 19, 37, 42 ஆம் செய்யுள்களில் இன்தேனனைய தமிழ், தென்மலையத் தமிழ், முத்தமிழ் எனப் பாராட்டுவார்.

அணியிலக்கணவகையில் நிரனிறை, பரிவர்த்தனை, தன்மை நவிற்சி, உவமை, உருவகம், சொற்பின் வருநிலை முதலியன அங்கங்கே அமைந்துள்ளன.

உலக வழக்கிலுள்ள உவமைகள் பல 1, 3, 69, 96, 7, 71 அங்கங்கே குறிக்கப்பட்டுள. உலக வழக்குக்களும், வடசொற்களும், வடசொற்றொடர்களும் பல வந்திருக்கின்றன. அரும்பதங்களும், புதுப்பிரயோகங்களும் உள்ளன.

" இவ்வந்தாதி நூறு செய்யுட்கள் உள்ளதேனும் கிடைத்தவை 98 செய்யுட்களும், 99 ஆவது செய்யுளின் முதலடியுமே. கூழைப் பெருமானின் அந்தாதி ஆகலின் கூழையாகவே கிடைக்கும்படி திருவருள் செய்வித்ததுபோலும். முற்றும் கிடைப்பின் அநுகூலமாயிருக்கும்" என்று முதற்பதிப்பாசிரியர் கூறியிருத்தல் கருதத்தக்கது.

"இந்நூலாசிரியர் இன்னாரென்று தெரியாவிட்டாலும் இவர், படிப்பவர்கள் எளிதிற் பொருள் அறிந்து கொள்ளும்படி சொற்களையும் சொற்றொடர்களையும் திரிபு யமகங்களில் அமைத்துப் பாடும் சிறந்த

கவிஞர்கள் வரிசையில் சேர்த்து எண்ணப்படுபவர் என்பதுமட்டும் தெரிகிறது. இவருடைய வாக்கில் இருந்து இவர் வருத்த மின்றிச் செய்யுள் இயற்றும் திறமையுடையவர் என்றும், அகப்பொருட்டுறைகளைச் செவ்வனே அமைத்துப் பாடுவதில் வல்லவர் என்றும், சிவபெருமானுடைய திருவருள் ஒன்றனையே பற்றுக்கோடாக உடையவர் என்றும். உலகவழக்கிற் பயிலும் சொற்களையும் கருத்துக்களையும் அமைத்துப்பாடும் இயல்பினரென்றும் தெரிகிறது" என்பர்.

சங்கநூற் பிரயோகங்களும் தேவார திருவாசக முதலிய திருமுறைப் பிரயோகங்களும் அங்கங்கே அமைந்து விளங்குவதைக் குறிப்புரையால் அறிந்து கொள்ளலாம்.

சில வரலாறுகள்

கூழைப்பிரானும் – கூழையும்

கூழைக்குழகர், கூழை அமலர், தென் கூழைச் சங்கரர், கூழையரும்பொருள், கூழைக்கறைக்கண்டர், கூழைக்கங்காளர், கூழைவிமலர், கூழைப்பிரான், கூழைவாழ் சங்கரேசுரர், கூழைச் சிவக்கொழுந்து, கூழைப்புனிதர், கூழையுகந்தபிரான், கூழைச் சங்கரநாரணன், கூழைக்கண்ணுதலார் எனச் சிவபெருமான் திருநாமம் இந்நூலுள் வழங்கப்படுதல் வாலற்றுக் கூழையுருவத்தோடு காட்சி அளித்தமையின் கூழைப்பிரான் என்னும் திருநாமம் இறைவருக்கு ஆகிப் பின்பு இத்தலத்துக்கும் கூழை என்னும் பெயர் வந்தது.

சங்கர நாராயணத் திருவுருவம் காட்டியமை

சங்கன், பதுமன் என்னும் மாநாகர் இருவருள் ஒருவர் உண்மைப்பொருள் சிவபெருமான் என்றும், மற்றொருவர் திருமாலென்றும் வாதித்துக் கொண்டிருந்து பின்னர் வியாழபகவானது ஏவலால் வந்து இத்தலத்தில் தவஞ்செய்ய, இருவரும் ஒருவர் என்பது அவர்களுக்குப் புலப்படச் செய்தற்கு இறைவர் சங்கர நாராயணத் திருவுருவத்தைக் காட்டியருளினர். இதனை (8) சங்கரநாராயணரான சருக்கத்தாலறியலாம்; இதில் 70 பாடல்கள் உள்ளன.

சிவபெருமான் புன்னை விருட்சத்தினடியில் எழுந்தருளியிருத்தல்

கொற்கையை இராசதானியாகக்கொண்டு அரசாண்ட உக்கிரப்பெருவழுதி என்னும் அரசன் நாள்தோறும் திருவாலவாய் சென்று ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்துவரும் நியமமுடையவன். ஒருநாள் தரிசனம் செய்தற்கு இத்தலத்தின்வழியே செல்லுகையில் அவன் ஏறிவந்த யானை கீழேவிழுந்தது. அப்பொழுது அரசன் ஒன்றும் தெரியாமல் திகைத்து நிற்கையில் மணிக்கிரீபன் என்பவன் வந்து பணிந்து, "அரசே! அடியேன் இந்த வனத்தைத் திருத்திக் கொண்டிருப்பவன், ஒரு புற்றை வெட்டுகையில் அவ்வெட்டினால் வாலற்றுப்போன பாம்பொன்று மேலே தோன்றியது. அதனைப் பரமசிவனுடைய திருவுருவமென்றே எண்ணுகிறேன்" என்று சொன்னான். அரசன் அங்கேசென்று பார்த்துக்கொண்டு நின்று.

"மதுரைக்குச்செல்ல முடியவில்லையே" என்று வருந்தியபொழுது, "அரசே! நீ மதுரைசென்று அலைய வேண்டாம்; அங்கயற்கண்ணியோடும் ஆலவாயமர்ந்த அண்ணல் இங்கு எழுந்தருளியிருக்கின்றார். இவ்விடத்திலேயே தரிசனம் பண்ணிக்கொள்ளலாம்" என்று ஓர் அசரீரி உண்டாயிற்று. உடனே அவன் புன்னை மரத்தின் நிழலில் புற்றினருகே ஒரு சிவலிங்கம் இருக்கக்கண்டு தரிசனம் செய்துகொண்டு திருக்கோயில் முதலியவற்றை அமைத்து அங்கே வாழ்ந்துவந்தனன் என்பது இத்தலபுராண வரலாறு. இதனை (9) உக்கிரன் வழிபடு சருக்கத்தால் (36 பாடல்கள்) அறியலாகும். "நினைவா ரிதயம் நிறைந்திருப்பார் புன்னை நீழலுற்றோர்" (54) என்பதில் சொல்லப்படுகிறது.

இனி, இந்த நூல் ஒரு தெய்வபலம் பொருந்தியதென்பதை நன்றாகப் பலமுறை அநுபவத்தில் அறிந்து வைத்துளேன். பலமுறை இதனைப் பாடம் சொல்லிச் சொல்லி எனக்கு இதில் பெரும்பற்று மிக விளைந்தது. அதன் பயனாகப் பலர் இஷ்டசித்திகளை அடையவும், மணம் பெறாதோர் மணஞ்செய்துகொண்டு நல்வாழ்வடையவும், நோய் நீக்கம் பெறவும் மிக மிக ஏதுவாயுள்ளது.

திருவாவடுதுறையில் ஸ்ரீமத் ஐயரவர்கள் பயின்று வந்த காலத்துக் கிடைத்த ஒரு ஏட்டுச்சுவடியும், அதைப்பார்த்துப் பிரதி செய்த மற்றொன்றும் கிடைத்த வரலாற்றைத் தமது முகவுரையிலே குறிப்பிட்டுள்ளார்கள். அந்தச் சுவடி எழுதப்பட்டகாலம் அப்பிரதியின் இறுதியில் "அக்ஷய௵ ஆவணிமீ 25உ சனிக்கிழமையும் அசுபதியிலேயும் எழுதி முற்றியது.

முற்றிலும் இந்தச் சுவடி எழுதின பிறகு ரோகம் தீர்ந்தது ... ... சுப்பிரமணியக்கடவுள் துணை. குழைக் காதர் திருவடிகளே சரணம். கூளஅய்சூ௵ அற்பிசிமீ மைக்காப்புச் சாத்தியது என்று அறியத்தக்கது'' என்பது எழுதப்பட்டிருந்தது என்பர். இதனால் அப் பிரதி எழுதப்பட்ட காலம் இற்றைக்கு 158 ஆண்டு களுக்கு முன்பு என்பதும் இந்நூல் செய்யப்பட்ட காலம் அதற்கு முற்பட்டதே என்பதும் விளங்குகிறது. இந்த வசனமொன்றே தெய்வ நலமுடையதென அறிந்து நடைமுறையில் நலம்பல பெற்று வருதற்கு ஏதுவாயிற்று என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பிரசுர மாக 1934-ல் வெளிவந்த இந்நூலும் குறிப்புரையும் பின்பு பலருக்கும் பாடஞ்சொல்லிக் கைவரப்பெற் றது. 1967-ம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே பெரிதும் தேடியும் எனக்கு ஒரு பிரதிதான் கிடைத் தது. அதைப்பார்த்துப் பிரதிசெய்துகொண்டு என்பால் பாடங்கேட்டோர் பலர். இன்று கும்பகோணத்தில் மட்டும் இந்நூல் காகிதப் பிரதிகளாக 15-க்கு மேல் உள்ளன. இந்த 1969 மார்ச்சுமாதம் சங்கத்துப் பதிப் புக்கள் பலவற்றை விலைக்குப் பெறச் சென்ற ஒரு மாணவர் துருவித்துருவித் தேடி 4 பிரதிகள் கிடைக்க முழுவதையும் வாங்கி வந்தார். [illegible]5 ஆண்டுகளுக்குள் பிரதிகள் கிடைப்பது பெரிதும் அரிதாயிருக்கிறதே என்று மிகக் கவன்றூர். ஸ்ரீமத் ஐயரவர்கள் குறிப்புரை யுடன் பாடஞ்சொன்னவகையில் மேலும் சில குறிப் புக்களும் சேர்த்து இந்த அந்தாதி வெளிவருகிறது.

உலகத்துக்கு நலம் பல விளைக்கும் பயனென்றே கருதி 15—9—1965-ல் இதனை அச்சிடுதற்கான முயற்சிகள் செய்தும் இப்பொழுதுதான் ஸ்ரீ மகாலிங்கசுவாமி யின் திருவருளாலும், குருவருளாலும் வெளிப்படுத்த முடிந்தது.

இத்தல சம்பந்தமான புராணம் ஒன்றும், உலா ஒன்றும் உள்ளன. 1933 ஆம் ஆண்டிலே நான் பல வான் குடியில் சிவநேசன் அச்சகத்திலிருந்தபோது உலாப் பதிக்கப்பெற்றது. இந்த அந்தாதி பாடிய ஆசிரியர் பெயர் தெரியாததுபோலவே உலா இயற்றிய ஆசிரியர் பெயரும் தெரியாததாயிற்று. புராணம் சீவல மாற பாண்டியனால் இயற்றப்பெற்றது. 8. சங்கர நாராயணரானச் சருக்கம்முதல் 14. கன்மாடச்சருக்கம் முடிய உள்ளது. முற்பகுதியாகவுள்ள 7 சருக்கம் மட்டும் 60 ஆண்டுகளின் முன்பு புளியங்குடி முத்து வீரப்ப கவிராசரால் இயற்றப்பெற்றதென்பர். புராணச் செய்யுள் தொகை முழுவதும் 506. சங்கரவிலாசம் என்னும் மற்றொரு புராணமும் அச்சாகியுள்ளது.

இத்தல சம்பந்தமாகக் கோமதியம்மை பிள்ளைத் தமிழும் உண்டு.

சங்கரநயினூர் கோயிலந்தாதி, சங்கரநயினூர்கோயிற் சங்கரலிங்க உலா எனத் தலப்பெயருடன் கூடி விளங் குதலால் தமிழிலுள்ள தலபுராணமும் சங்கரநயினூர் கோயிற்புராணம் என்றே இருந்திருக்க வேண்டும் எனத் தோற்றுகிறது. சங்கரரும் நாராயணரும் கலந்த திருவுருவம்: 58 ஆம் பாடலாற்காண்க. "ஏறேறு திரு மாலோர் பாகத்தான் காண்" "திருமாலோர் பங்கத் தான் காண்" என்பன தேவாரம். "தாழ்சடையும்

நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும், சூழரவும் பொன்ஞனும் தோன்றுமால் — சூழும், திரண்டருவி பாயும் திருமலேமே லெந்தைக்கு, இரண்டுருவு மொன்ருயிசைந்து" (திவ்: மூன்ருந்திருவந்தாதி - 63,) "ஒரு ற் புலித்தோ லுடைதயங்க மற்றை, ஒருபாற் பான்ருடை யொளிர - ஒருபால், மழுவு மொருபால் வளேயுந் துலங்கத், தழுவு முருவமமைந்து" (கண்ணி 13—14) "கங்கா யமுனேச் சங்கமம்போலவும், சங்கர நாரணர் சட்டகம்போலவும் வெண்பாவும் ஆசிரியமு விரா அய்ப், பண்பார் புறநிலே" (யா. விருத்தி: மேற்) என்னும் பழைய உதாரணச்செய்யுளில் மருட்பாவுக்கு இம்மூர்த்தம் உவமையாகக் கூறப் பெறுதல் காண்க.

இத்தகைய நலங்களமைந்த இந்த அந்தாதி நூலேக் குறிப்புரை முதலியவற்றுடன் ஸ்ரீ - ல — ஸ்ரீ மகா சந்நிதானத்தில் வைத்து விண்ணப்பித்து அச்சிட உத்தரவாக வேண்டுமெனத் தெரிவித்து இரந்தரின்றேன். அதனேத் தமது திருக்கரத்தாலெடுத்து முழுவதும் ஒருமுறை நன்ருகப் படித்துப்பார்த்து உடனே திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி வசந்தோற்சவ விழாவிலே வழங்குமாறு விரைந்து அச்சிடுக என்று கருணேகூர்ந்து கட்டளேயிட்டருளிஞர்கள். அன்றியும், சமீபத்திலே நாம் அங்கே தரிசனத்துக்குச் சென்றபோது திருவாபரணமும் சார்த்தி லட்சார்ச்சனேயும் செய்துவந்தோம் என்றருளிஞர்கள். அக்கட்டளேயைச் சிரமேற்கொண்டு அச்சிட்டு வெளிப்படுத்தலானேன்.

திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து பெற்ற ஏடாயினும் அதனே நன்கு ஆராய்ந்து மதுரைத் தமிழ்ச்

சங்கத்துச் செந்தமிழ்ப் பிரசுரமாக வெளியிட்டு உபகரித்த ஸ்ரீ மகாமகோபாத்தியாய ஐயர் அவர்களுக்கும், மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பெரியோர்களுக்கும் யானேயன்றி இதனேப் பெற்றுப் படித்து இன்புறும் தமிழன்பர்களும் பெரிதும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையோம் என்பதைச் சங்கத்துச் சான்ருேர்களுக்கும் விநயமாக விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன். ஸ்ரீமத் ஐயரவர்கள் ஆராய்ந்து அச்சிட்டுபகரித்த நூல்கள் யாவையும் (ஒன்றிரண்டு தவிர) திருவாவடுதுறைக் கல்விக்களஞ்சியத்திலிருந்து பெற்றவைகளே என்பதை அந்தந்த நூல்களின் முகவுரைகளால் யாவரும் நன்கறிந்ததேயாம்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திலே இப்போது இருபத்திரண்டாவது குருமகா சந்நிதானமாக வீற்றிருந்தருளும் ஸ்ரீ - ல - ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகளவர்கள் கட்டளேயிட்டருளியபடி இதனேத் தேவஸ்தான வெளியீடாக அச்சிட்டு வழங்கியுள்ளேன்.

குற்றம் பொறுத்தருளுக.

இங்ஙனம்,

சித்தாந்தசைவமணி ...

திருவாவடுதுறை. 27—5—69. } த. ச. மீனுட்சிசுந்தரம்பிள்ளே, ஆதீன வித்துவான்.

உ

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
    போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
    மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
    குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
    நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சங்கரநயினார்கோயில் அந்தாதி

விநாயகர் காப்பு

வெண்பா

ஞானவர ராசையொடு நாடவருள் சங்கரற்கன்
பான வரராசை யந்தாதி — தானவில
வெஞ்சமரு வந்தவடி வெங்கரடத் தந்திமுகன்
கஞ்சமரு வத்தவடி காப்பு.

(குறிப்புரை) ஞான வரர் நாட - சிவஞானத்தை யுடைய பெரியோர் நாடும்படி. ஆசையோடு - விருப்பத்தோடு. வர ராசை - சங்கரநயினார்கோயில். சங்கரற்கு நவில: நவிலுதல் - சொல்லுதல். சங்கரன் என்பது இத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்வாமியின் திருநாமம். வெம் சமரை உவந்த. சமர் - போர். வடி - மதம் பெருகுகின்ற. கரடம் - மதம் பாயும் சுவடு. கஞ்சம் மரு வந்த - தாமரையின் வாசனை பொருந்திய.

நூல்

பார்தந்த நான்மறை யோன்பணி
ராசைப் பரமவிண்ணு
ளார்தந்த மாமல கக்கனி
யேயென் றகத்துள்வைக்கும்

நேர்தந்த மாமருங் காவுடை
நாயக நீள்புழைக்கை
ஓர்தந்த மாமத யானைதந்
தாயென் றுரைநெஞ்சமே. (1)

(கு - ரை) பார் தந்த - உலகங்களைப் படைத்த. நான்மறையோன் - பிரமன். ராசை - இத்தலத்தின் திருநாமம். தம் தம் - தங்கள் தங்களுடைய. ஆமலகக் கனி - நெல்லிக்கனி: 'சிந்தித்தெழுவார்க்கு நெல்லிக் கனியே'. 'அங்கை நெல்லியின் பழத்திடை யமுதே' (தேவா: சுந்தரர்.) விண்ணுளார் அகத்துள் வைக்கும். தந்து நேர் அமருங்கு - நூலைப்போன்ற அழகிய இடையையுடைய; நேர் நுண்மையுமாம். ஆவுடை நாயக - ஆவுடையம்பிகையின் நாயகரே: "ஆவுடை நாயகனே" என்பர்(20) பின். ஓர் தந்த மாம்தயானை - விநாயகர். தந்தாய் - தந்தையே

நெஞ்சமே உரை.

தலைவன் பாங்கனுக்கு உற்றதுரைத்தல்

உரைக்கடங் காதண்ண லேகயல்
பாய வுடைந்தகஞ்ச
விரைக்கடங் காத வயல்பாயுங்
கூழையில் வித்தகர்வெண்
திரைக்கடங் காதரத் தோடயின்
ரோர்பொற் சிகரநெடு
வரைக்கடங் காத வளர்முலை
யார்கண் மருட்டியதே. (2)

(கு - ரை) உரைக்கு அடங்காது; உரைக்கு - சொல்லில். அண்ணலே என்றது பாங்கனை நோக்கி.

கஞ்ச விரைக் கள் தங்காது அ வயல் பாயும்; அ - கஞ்ச விரைக் கள் - தாமரை மலர்களில் அழகு. பொருந்திய மணந்தங்கிய தேன். கூழை - இத்தலத் தின் திருநாமம். வெண்திரை கடுவை; கடு - விடம். அங்கு ஆதரத்தோடு; ஆதரம் - விருப்பம். வரை - மலையின்பக்கத்தில். கடம் காத-ருடத்தைக் காதுதற்கு.

அண்ணலே! தலைவியின் கண்கள் என்னை மருட் டினமை உரைக்கு அடங்காது.

இது தலைவன் பாங்கனுக்கு உற்றதுரைத்தல்: "விரித்துச் சொலற்கென்ற ஞன்முடி யாதன்ப...வரிக் கண்மின் ஞரங் குசத்தா லதனை மடக்கியதே" (கோடீச் சுரக்கோவை- 46) என்பது இதனோடு ஒப்பிடற்பாலது.

தேனா கரக்குளிர் மென்பூச்
சொரிந்தயன் செங்கணெடு
மாலு கரக்கு மதியணிந்
தோய்வர ராசைவெள்ளை
ஆனு கரக்குன் றுரித்தோயென்
றேத்தி யகங்கனலிற்
ருனு கரக்கு நிகரா
யுருகுவர் தஞ்சமென்றே. (3)

(கு - ரை) தேன் ஆகரம் - தேனுக்கு இருப்பிட மாகிய. அயனும் நெடுமாலும் நாகரும் (தேவரும்) எழுவாய். அக்கு மதி அணிந்தோய்; அக்கு - உருத்தி ராக்கம்; சங்குமணியுமாம். வெள்ளை ஆனு; ஆன் - இடபம். கரக்குன்று - யானையை. அகம் - மனம். கன லில் ஆரு அரக்கு நிகர் ஆய் - நெருப்பைச் சார்ந்த அரக்கையொத்து. தான்: அசைநிலை. தஞ்சம் - பற்றுக் கோடு.

அயன் முதலியோர் ஏத்தித் தஞ்சம் என்று உருகுவர். அணிந்தோய்! ஆனு! உரித்தோய்! என்று ஏத்தி.

செவிலி கூற்று

தஞ்ச மளிக்க வருகூழை
நம்பர்கைத் தாமரையால்
நஞ்ச மளிக்களம் வைத்தருள்
வோர் நறை பூத்தமலர்ப்
பஞ்ச மளிக்கண் மருவா
ரினியொரு பாவிபெற்ற
அஞ்ச மளிக்கண்டு யிலாதெவ்
வாறுய்யு மாவியுமே. (4)

(கு - ரை) தஞ்சம் அளிக்க - பற்றுக்கோட்டை அளித்தற்கு. நஞ்சம் கைத்தாமரையால் அள்ளி - விடத்தைத் திருக்கரத்தால் அள்ளி. களம் - கண்டத்தில். நறை - தேன். மலர்ப் பஞ்சு அமளிக்கண் - மலரையும் பஞ்சையும் உடைய படுக்கையில். மருவார் - பொருந்தார். அஞ்சம் - அன்னம்போல்வாள். நற்றாய்க்கும் தனக்குமுள்ள ஒற்றுமைபற்றிப் பாவிபெற்ற அஞ்சம் என்றாள்: "அணங்கென் வயிற்றிற், பிறந்திருந்தாள்" (95) என்பர் பின். அளிக்கண் - வண்டைப்போன்ற கண்கள். துயிலாது - துயிலமாட்டாள். ஆதலால் அவள் ஆவி எவ்வாறு உய்யும்?

இது கூழை நாயகரையே கிளவித் தலைவராகக் கொண்டு கூறியது.

கூழை நம்பர் மருவார்; அஞ்சம்போல்வாள் அளிக்கண் துயிலாள்; அவள் ஆவி எவ்வாறு உய்யும்? என்க.

தலைவி கூற்று

ஆவிக்கு மாவி யனையமின்
னேயினி யந்திபட்டாற்
பாவிக்கு மாவிற் குயில்பகை
வேய்பகை பாய்பகழிப்
பூவிக்கு மாவில் பகையா
ருரைப்பர்பைம் போதருந்திக்
கோவிக்கு மாவி புடைசூழுங்
கூழைக் குழகருக்கே. 5)

(கு - ரை) ஆவிக்கும் ஆவி அனைய - உயிருக்கும் உயிரைப்போன்ற; உம்மை: உயர்வு சிறப்பு. மின்னே என்றது தோழியரை. அந்திபட்டால் - அந்திக்காலம் தோன்றுமாயின்; படுதல் - தோன்றுதல். பாவிக்கு - பாவியாகிய எனக்கு. மாவிற்குயில் - மாமரத்திலுள்ள குயில். வேய் - புல்லாங்குழல். பகழிப்பூ - அம்புகளாகிய பூக்கள். இக்கு மா வில் - கரும்பாகிய பெரிய வில். போது அருந்தி - பூக்களை உண்டு. கோ - பசுக்கள். விக்கும் - விக்கிக்கிடக்கும். ஆவி - குளம். (குழகர் - 6, 29;) "குழகன் குடமூக்கு" (தேவா).

கூழைக் குழகருக்கு யார் உரைப்பார்.

மாலைக்காலத்திலே தலைவனைப் பிரிந்த தலைவிக்குக் குயில், புல்லாங்குழல், மலரம்புகள், கரும்பு வில் இவைகள் பகையைச் செய்வனவாம்; வருத்துவன என்றபடி.

பாங்கி தலைவனை இரவுவரல் விலக்கல்

குழகரி மாசலக் கொம்பொரு
பாகங் குடியிருக்கும்
அழகரி மாலயன் போற்றிய
கூழை யமலர்வெற்பின்

மழகரி மான வருமண்ணா
லேநின்று மண்டுகொலை
பழகரி மாவுண் ணிரவிங்கு
நீவரல் பான்மையன்றே. (6)

(கு - ரை) குழகர் - இளமைப் பருவத்தையுடையவர். இமாசலக்கொம்பு - உமாதேவியார். இமாசலம் - இமயமலை. அழகர். இ மால் அயன் - இந்த மாலும் அயனும் போற்றிய. மழ கரி மான - இளமையையுடைய யானையை ஒப்ப. கொலை பழகு அரி - கொலையிற்பழகிய சிங்கமானது. மா உண் இரவு - யானையை உண்ணும் இரவில், பான்மை - முறைமை.

பானலங் கண்ணி யொருபாகர்
முக்கட் பரமர்மலர்த்
தேனலங் கண்ணிறை தென்கூழைச்
சங்கரர் செய்யகழல்
மேனலங் கண்ணி யுருகா
ரரும்புனல் வேட்டுவெறுங்
கானலங் கண்ணி யுழன்மா
னௌவுட் கலங்குவரே. (7)

(கு - ரை) பானல் அம் கண்ணி - கருங்குவளை மலர்போன்ற அழகிய கண்ணையுடைய உமாதேவியார். மலர்த்தேன் - பூக்களிலுள்ள தேனானது. அலம் கண் நிறை - கலப்பை சென்ற இடத்தே நிறைந்திருக்கும்: "மதுவானிறைந்த தேக்கம் அலத்து வழியே பரக்கும் திருப்புகலூர்" (திருப்புகலூர் அந்தாதி - 1) கழல் மேல் நலம் - திருவடிக்கண்ணுள்ள இன்பத்தை; மேல் - இடம். கண்ணி - கருதி. வேட்டு - விரும்பி. கானல் அங்கு அண்ணி - பேய்த்தேரையுடைய அவ்விடத்தை அடைந்து. அலக்கண் எனற்பாலது திரிபு

நோக்கி மெலிந்து நின்றது. இவ்வாறே பின்வரும் வேறுபாடுகள் பலவற்றையும் திரிபுநோக்கி வந்தன என்றுகொள்க.

உருகார் கலங்குவர் என்க.

தலைவன் பாங்கனுக்குத் தலைவியின் இயலிடங்கூறல்

கலங்கு தலைச்செய் தருள்வேல்
விழிவளை கந்தரங்கோ
குலங்கு தலைச்சொன் முகிலோதி
நூலிடை கோங்கமுலை
மலங்கு தலைப்படும் *வாவிகள்
சூழ்வர ராசையெந்தை
இலங்கு தலைக்கண்ணி சூடும்
பிரான்வெற் பிளங்கொடிக்கே. (8)

(கு - ரை) கலங்குதலைச்செய்து அருள் விழிவேல் - முன்னர்க் கலங்குதலைச்செய்து பின்னர் அருளுகின்ற விழிகள் வேல்போல்வன: "இருநோக்கு இவள் உண்கண் உள்ளது ஒருநோக்கு. நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" (குறள் - 1091) "மாண்பி னஞ்சமமிர்தமு மேபோல் குணத்த பொருகயற்கண்" (சிந்தாமணி - 167) "பிணியுமதற்கு மருந்தும் பிறழப் பிறழ மின்னும், பணியும் புரைமருங் குற்பெருந் தோளி படைக்கண்களே" (திருச்சிற்றம்பலக்கோ - 5) கந்தரம் வளை - கழுத்து வளைபோல்வது; வளை - சங்கு. ஓதி - கூந்தல். குதலைச்சொல் கோகுலம்; கோகுலம் - குயில்: "கோகுலமாய்க் கூவுநரும், ஆகுல மாகுநரும்" (பரிபாடல்: 9 - 65, 6) "மாகுல வல்லியின் மஞ்ஞை யாடல்

* (பி - ம்) 'வாவிக ளார்வர ராசை'

போற், கோகுல மார்தருக் குழாத்தின்'', "கோகுலப் பறவையுங் கொல்லுமோ வென்பான்'' (கந்தபு: திருநாட் - 43; குமரபுரி - 48). கோங்கம் - கோங்கரும்பு. மலங்கு தலைப்படும்-மலங்குமீன்கள் கலந்திருக்கின்ற. தலைக்கண்ணி - தலைமாலையை: "தலைமாலை தலைக் கணிந்து'' (தேவா), "விரிசடைமேற், றிரைவளர் கங்கை நுரைவளர் தீர்த்தஞ் செறியச்செய்த, கரைவளர் வொத்துள தாற்சிர மாலையெங் கண்டனுக்கே'' (பொன்வண்ணத்தந்தாதி - 28). பிரான்வெற்பு - சங்கரரது மலையிலுள்ள.

பாங்கி கூற்று

இளந்தென் றலைவட வானல
மென்னு மிகன்மதன்கா
களந்தென் றலையமன் காணென
வேங்குங் கடலகடு
*பிளந்தென் றலைவந் தழிப்பதெந்
நாளெனும் பேதையிவ்வா
றளந்தென் றலையி லெழுத்தெனுங்
கூழை யரும்பொருளே. (9)

(கு - ரை) இளந்தென்றலை - இளைய தென்றற் காற்றை. வடவா அனலம் என்னும் - வடவைத்தீ என்று சொல்லுவாள். மதன் காகளம் - குயிலை; காகளம் - காளம். தென் தலை யமன்காண் என ஏங்கும் - தென்பாலுள்ள எமனென்று ஏங்குவாள். கடல் அகடு - கடலின் நடுவை. என்று - சூரியன். அல்லை - இருளை. என்று பிளந்து வந்து அல்லை அழிப்பது எந்நாள் என்பாள். பேதை - தலைவி: எழுவாய். அளந்து -

* (பி - ம்) "பிளந்தென் றலைவந் துதிப்பதெந் நாள்"

இடைவிடாமற் பேசி: வழக்கு. என் தலையில் எழுத்து - இத்துன்பத்திற்குக் காரணம் என் தலையெழுத்தே. எனும் - என்று சொல்லுவாள்.

அரும்பா தகஞ்சன னந்தொறுஞ்
செய்குவ தன்றியுன்னை
விரும்பா தகஞ்சமன் விட்டுவி
டான்கதி *வீடருள
வரும்பா தகஞ்சமும் வாய்க்குங்
கொலோவிம வானளித்த
கரும்பா தகஞ்சலி விண்ணோர்செய்
கூழைக் கறைக்கண்டனே. (10)

(கு - ரை) பாதகம் - பாதகத்தை. சனனந்தொறும் - பிறப்புக்கள்தோறும். அகம் உன்னை விரும்பாது; அகம் - மனம். சமன் - யமன். கதியாகிய வீடு - முத்தியை. அருள - அருளுதற்கு. பாத கஞ்சம் - தேவரீருடைய திருவடித் தாமரைகள். இமவான் அளித்த கரும்பு - உமாதேவியார்: "வாமக் கரும்பு மனைக்கரும்பாமாரூரர்'' (திருவாரூர் நான்மணிமாலை - 33) தகு அஞ்சலியை.

கூழைக் கறைக்கண்டனே! பாதகஞ்சம் வாய்க்குங் கொலோ.

பாங்கி கூற்று

கறையர வம்புலி சூடிய
கூழைக்கங் காளர்சது
மறையர வம்புலி வாழ்புர
மாய்த்தவர் மங்கை பங்கர்

* (பி - ம்) "வீடளிக்க"

முறையர வம்புலி போற்றீச
  ரென்று மொழிந்தவர்பால்
உறையர வம்பு லிபித்தா
  னயனிந்த வொண்டொடிக்கே. (11)

(கு - ரை) கறையரவு - விஷத்தையுடைய பாம்பை யும். அம்புலி - சந்திரனையும். கங்காளம் - முழு எலும்பு. சதுமறையர் - நான்கு வேதத்தை அருளிச்செய்தவர். அவம் புல்லி வாழ்புரம் - வீண்செயலை மேற்கொண்டு வாழ்ந்த திரிபுரங்களை; உடையவரது தொழில் உடை யவற்றின்மேல் ஏற்றப்பட்டது. அரவம் முறை - முழக் கத்தையுடைய வேதங்களும்; முறை - வேதம்: 'மும் முறையாலும் வணங்கப்படுகின்ற முக்கணக்கன்'' (பொன்வண்ணத்தந் - 87) மூறை அரவு அம்புலி போற்று ஈசர் - விதிப்படி பதஞ்சலி முனிவரும், வியாக் கிரபாத முனிவரும் போற்றுகின்ற சிவபெருமான். உறை அர - வீற்றிருந்தருளும் அரன் என்னும் திரு நாமத்தை உடையவரே. அயன் வம்பு லிபித்தான் - பிரமதேவன் (என் தலையில்) வீணே எழுதினான்: லிபி - எழுத்து. ஒண்தொடிக்கு - தலைவிக்கு. என் தலையில் எழுத்து என்றார் முன்னும்.

பாங்கி கூற்று

தொடிகைக்கு நீங்குந் துகிலிழந்
  தேங்குந் துயரினயர்
வடிகைக்கு நீலி யன்னையிவ
  ளாவி வலியவிடும்
படிகைக்கு நீபெண் பழிகைக்கொ
  ளாதுகண் பார்த்தருளெல்
விடிகைக்கு நீள்பொழில் சூழ்வர
  ராசையில் வித்தகனே. (12)

(கு - ரை) தொடி - வளையல். கைக்கு - கையி னின்றும்: வேற்றுமை மயக்கம். நீங்கும் - நீங்குவாள். துகில் - ஆடை. ஏங்கும் - ஏங்குவாள். துயரின் அயர் வள். திகைக்கும் - திகைப்பாள். நீலியாகிய அன்னை யானவள். ஆவியை வலிய விடும்படி அன்னை இவளைக் கைக்கும்; கைக்கும் - வெறுப்பாள். எல் - இராத்திரி. விடிகைக்கு - விடிதற்பொருட்டு. எல் விடிகைக்கு நீ கண்பார்த்தருள். நீ அருளாவிடின் இராப்பொழுது யுகமாகவளரும் என்றபடி: "சேல்விழிகள் பெய்யவம் போருக மானதிராவெனும்'' (22) என்பர் பின்.

வித்துரு மத்தனி மேனியர்
  கூழை விமலர்கக
னத்துரு மத்தர் சிவசங்க
  ரேசர்நண் ணார்விடுத்த
சத்துரு மத்த கயமுரித்
  தோர்மலர்த் தாட்பணிசேர்
பித்துரு மத்தனை யோவிட்
  டியமன் பிடிப்பதின்றே. (13)

(கு - ரை) வித்துருமம் தனி மேனியர்; வித்துரு மம் - பவழத்தைப் போன்ற. ககனம் துருமத்தர் - ஆகா யத்தில் உள்ள கற்பக தருவைப் போன்றவர்; ககனம் - விண்ணுலகம். துருமம் - மரம்; கற்பகம்: "கருவே என் கற்பகமே'', "கஞ்சனூ ராண்ட கோவைக் கற்ப கத்தைக் கண்ணாரக் கண்டே னனே'', "கடிக்குளத் துறையுங் கற்பகத்தை'' (தேவாரம்), "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை'' (திருவிசைப்பா). சத்துரு மத்தம் கயம் - பகைமையையும் களிப்பையும் உடைய யானையை; மத்தம் - மதமுமாம். விடுத்த கயம் என இயைக்க. மலர்த்தாள் பணிசேர் - மலர்போலும் திரு வடிக்குரிய பணிவிடைகளிற் பொருந்தும். பித்து

உரு மத்தனை - பித்தையே உருவமாகக்கொண்ட அடியேனை; மத்தம் - வெறி. ஒலிட்டு - முழங்கி; ஒலம்: கடைக்குறை.

பிடிக்கும் பிடிமருங் கோர்பாகன்
கூழைப் பிரான்கமல
அடிக்கும் பிடிகம் பரநல்கும்
வேல்விழி யாலுயிரைக்
குடிக்கும் பிடிநடை யாராசை
தீர்க்குங் குறித்ததெலாம்
முடிக்கும் பிடிப்ப தெமக்கெந்த
நாளினு முன்னிற்குமே. (14)

(கு - ரை) பிடிக்கும் பிடி - கைப்பிடி போன்ற. மருங்கு ஓர் பாகன் - இடையினையுடைய உமாதேவியாரை ஒருபக்கத்தில் உடையவர். மருங்கு - இடை: "ஒல்குபு நுடங்கு மொருபிடி நுசுப்பினர்" (பெருங்: 22 - 216); "ஒருபிடி நுசுப்பினளை" (சீவக சிந்தாமணி - 613); "இடையும் நடையு மொருபிடியென்ன எழுதுவனே" (சீகாழிக்கோவை; - 144). கும்பிடானது இகத்தையும் பரத்தையும் நல்கும். குடிக்கும்: பெயரெச்சம்- நடையார்பாலுள்ள ஆசையைத் தீர்க்கும். பிடிப்பது - யாம் விரும்புவது.

கமல அடிக்கும்பிடு நல்கும், தீர்க்கும், முடிக்கும், முன்னிற்கும்: ஆகலின், எமக்குப்பிடிப்பது அது.

செவிலி கூற்று

முன்னிலங் கேசன் புயமடர்
கூழைமுக் கண்ணர்விண்பூ
மன்னிலங் கேசவன் றேடரி
யார்மலர்த் தாள்பணியத்

தன்னிலங் கேசஞ் சரியச்சென்
றுள்சென்று தான்பெறலே
தென்னிலங் கேசரி போகவில்
வேடன்கை யேவைந்துமே. (15)

(கு - ரை) இலங்கேசன் - இராவணனது. விண்பூமனும் நிலம்கேசவனும் தேடரியார்; பூமன் - பிரமன். கேசவன் - திருமால். தேடரியார்: தொகுத்தல். தன்னில் - தானுகவே. சரிய - அவிழ்ந்து விழுமாறு. கேசம் - கூந்தல். கேசம் சரிய சென்றுள். ஏது என்னில் - யாது என்றுல். சரி போக - கைவளை நீங்க. சரி வழக்கு. பெறல் ஏ ஐந்துமே. வேள் - மன்மதன், கை ஏ ஐந்துமே - கையிலுள்ள மலரம்புகள் ஐந்தையுமே. ஏ - அம்பு.

தலைவி கூற்று

ஐயான னத்தன் வரராசை
வாழு மமலன்மலர்க்
கையான னத்தன் பணிசங்க
ரேசன் கடுக்கையருள்
செய்யான னத்தன் விதித்ததிவ்
வாறு திகழ்பசலை
மெய்யான னத்தன்மை சற்றுமெண்
ணரிந்த மெல்லியரே. (16)

(கு - ரை) ஐ ஆனனத்தன் - ஐந்து திருமுகங்களையுடையவர்; ஆனனம் - முகம். கை ஆன நத்தன் - கையின் கண்ணே பொருந்திய சங்கத்தையுடைய திருமால்; நத்து-சங்கமாகிய பாஞ்சசன்னியம். கடுக்கை - கொன்றை மலர்மாலை. அன்னத்தன் விதித்தது இவ்வாறு. அமலன் - மலரகிதர். அனத்தன் - அன்ன

வாகனத்தையுடைய பிரமதேவன். மெய் பசலை ஆன - மெய்யின்கண் பசலை பரந்தன. நத்தன்மை - நம் தன்மையை: வலித்தல் விகாரம். நத்து அன்மை எனப் பிரித்துத் தலைவன் விருப்ப மில்லாமையை எனப் பொருள் கொள்ளுதலுமாம். நத்துதல் - விரும்புதல்.

தலைவி கூற்று

மெல்லிய ராக வரிவண்டு
சூழ்குழன் மேருமுலை
வல்லிய ராக வசைபுகல்
வார்முன் மதகளிறு
சொல்லிய ராகவ னோர்கூழைச்
சங்கரர் துங்கவெற்பிற்
புல்லிய ராக மதிவிழுங்
காமலென் போனதுவே. (17)

இது சந்திரோபாலம்பனம்.

(கு - ரை) ராகம் - இசையையுடைய. வல்லி - கொடிபோல்வாய் : விளி. அராக வசை . விருப்பமில்லாததாகிய பழிமொழியை; அராகம் - விருப்பமின்மை. மத களிறு - கஜேந்திரன். ராகவன் - இராமர்: இது திருமால் என்னும் துணையாய் நின்றது. (36) பார்க்க. ஓர் - உணர்கின்ற. புல்லிய ராகு - பரிசித்த இராகு என்னும் பாம்பானது. புல்லுதல் - பரிசித்தல்: தழுவுதல். அ மதி - அந்தச் சந்திரனை. போனது என்க.

பாங்கி கூற்று

போனக னஞ்சு புலித்தோ
லுடைகொண்ட புன்னைவனத்
தானக னஞ்சு பணியாத
ராவணன் றன்னையடர்

கானக னஞ்சு கணையா
ளியைவென்ற கண்ணனெனும்
ஆனக னஞ்சுருண் மெல்லோதி
யாள்வர ராசையின்றே. (18)

(கு - ரை) போனகம் நஞ்சு; போனகம் - உணவு. புன்னைவனத்தான். அகன் நஞ்சு - மனம் நைந்து; அகம் - அகன்: இறுதிப்போலி. அடர் கால் நகன் - அடர்த்த கால் நகத்தையுடையவர். அஞ்சு கணையாளியை - மன்மதனை. கணை - அம்பு; இங்கே மலரம்புகள். கண்ணன் - நெற்றிக்கண்ணையுடையார். கனம் ஆன - மேகத்தையொத்த. கனம் - மேகம். ஓதி - கூந்தல்.

ஓதியாள் வரராசையில் இன்று புன்னைவனத்தான், கால்நகன், கண்ணன் என்பாள் என்க.

இன்றே னனைய தமிழ்வர
ராசையி லெங்களருட்
குன்றே னனைமலர்க் கோதைபங்
காபவக் கூர்கடலிற்
சென்றே னனைய நினதருண்
மாசித் திவலைபட
தின்றே னனைய வெனக்கெந்த
நாள்வந்து நேர்படுமே. (19)

(கு - ரை) இன் தேன் அனைய - இனிய தேனை ஒத்த. அருட்குன்றே. நனை - தேன்; நனைமலர் - போதுமாம். இது மொட்டருமலர் என்றும், முகைமலர் என்றும் செய்யுட்களில் வழங்கும். போது - மலரும் பருவத்தரும்பு. கோதை - உமாதேவியார். கூர் - மிகுந்த; பவக்கடல். சென்றேன் - முழுகினேன். அல் நைய அடியேனுடைய அஞ்ஞானம் கெடும்படி; அல் - இருள்.

அருள்மாரி - கருணை மழையின். திவலை - துளி. நனைய - நனையும்படி.

அடியேனுக்கு அருண்மாரியின் திவலைபடவும், நனையவும், எந்தநாள் வந்து கைகூடும் என்க.

பாங்கி கூற்று

படுத்திருக் குந்தளிர்ப் பாயலை
நீங்கிப் பதைபதைத்து
வடுத்திருக் குந்துயி லாளயி
லாளன்ன மாதுநல்லாள்
அடுத்திருக் குங்கண் டறியா
நினதுப தாம்புயத்தாள்
நடுத்திருக் கும்பர னேராசை
யாவுடை நாயகனே. (20)

(கு - ரை) படுத்திருக்கும் - பரப்பியிருக்கும். பாயலை - படுக்கையை. வடு திருக்கு - மாவடுவைப் போன்ற கண்கள். அன்னம் அயிலாள். இருக்கும் (வேதமும்) அடுத்துக் கண்டறியாத. நினது பதாம் புயத்தாள் - நின் திருவடித் தாமரையின் கண்ணே உள்ளாள்; ஏதேனும் ஒன்றைக்கருதி அதனைப்பெறு தற்கு வரங்கிடத்தல் இத்தலத்தில் வழக்கம் ஆதலின், 'நினது பதாம்புயத்தாள்' என்றாள். நடுத்து இருக்கும் - நடுங்கியிருப்பாள்: நடுத்து என்பது நடுநடுத்து என அடுக்கி வருவதும் உண்டு: 'நாமவேற் கண்ணுள் நடுநடுப்ப வாரலோ' (திணைமாலை நூற்றைம்பது 25)

ஆவுடை நாயகனே! நல்லாள் துயிலாள்; அயிலாள்! பதாம்புயத்தாள்; நடுங்கியிருப்பாள்; இவளுக்கு அருள்செய்க எனமுடிக்க.

நாரைவிடு தூது

நேரா யனங்கன் பொருபோ
தெரித்திடு நெற்றிவிழி
யாரா யனங்கன்பு செய்கூழைச்
சங்கரர்க் காருரைப்பார்
நாரா யனங்க ளிவள்போ
னடந்து நடைபழகும்
சீரா யனங்கள் குலதீப
மால்கொண்ட செய்தியையே. (21)

(கு - ரை) நேராய் - நேராகநின்று. அனங்கன் - மன்மதன். பொருபோது - போர் செய்ய நினைந்த காலத்து. நெற்றி விழியார். ஆயன் - இடையர் குலத்தில் வளர்ந்த திருமால். அங்குஅன்புசெய். சங்கரர்க்கு ஆர் உரைப்பார். நாராய் - நாரையே. அனங்கள் - அன்னப்பறவைகள். சீராய - சிறப்பமைந்த. நங்கள் குலதீபம்-எங்கள் குலத்திற்குத் தீபம்போன்றவளாகிய தலைவி. மால் - காமமயக்கம்.

நாராய்! செய்தியைச் சங்கரர்க்கு ஆர்உரைப்பார்.

பாங்கி கூற்று

செய்யவம் போருக மென்முலை
மீதிரு சேல்விழிகள்
பெய்யவம் போருக மான
திராவெனும் பெண்கொடியார்
வெய்யவம் போருக மூவெயின்
மேன்மக மேருவனைத்
தெய்யவம் போருகந் தாய்கூழை
வாழ்சங்க ரேசுரனே. (22)

(கு - ரை) செய்ய - சிவந்த: வயலின்கண் உள்ள என்றுமாம். அம்போருகம் - தாமரை. சேல்விழிகள் அம்பு (நீரைப்) பெய்ய. இரா ஓர் உகம் ஆனது: உகம் - யுகம். என்னும் - என்பாள். பெண் கொடியார் வெய்ய வம்பு ஒருக - அயல்மகளிர் கூறும் வெவ்விய பழிமொழியை உணர்க. பெண்கொடியார் என்ற நயம் காண்க. மூவெயில் - திரிபுரம். எய்ய - எய்வதற்கு. அம் போர் - அழகிய போரை.

சங்கரேசுரனே ஒருக.

சுரராசை யால்வந் தனுதினம்
போற்றுந் துணைப்பதத்தார்
வரராசை யாவுடை மாதுபங்
காளர் வணங்கியசெங்
கரராசை யாவு மொழித்தருள்
கூர்கறைக் கண்டர்கங்கா
தரராசை யாடை *யுடையாரென்
ருல்வினை தானறுமே. (23)

(கு - ரை) சுரர் - தேவர்கள். துணைப்பதத்தார் - இரண்டு திருவடிகளையுடையார். வரராசையில் எழுந்தருளிய; வரராசை-இத்தலத்தின் திருநாமம். ஆவுடை மாது - இத்தலத்து அம்பிகை திருநாமம். வணங்கிய செங்கரர் - வணங்கிய செவ்விய கரத்தினையுடைய அடியார்களின். ஆசை யாவும் - குற்றம் எல்லாவற்றையும்; ஆசு - குற்றம். கறை - நஞ்சக்கறை பொருந்திய. கங்காதரர். ஆசை ஆடை - திக்காகிய ஆடையை.

* (பி - ம்) "உடையாரென் றீவினை"

அறுகா ரரவணி தென்கூழை
வாழு மமலர்முன்னங்
குறுகா ரரண மெரித்தோர்
பதமலர்க் கோகனகம்
பெறுகா ரரவத் *திரைபோற்
கலங்குமென் பேதைநெஞ்சே
மறுகா ரரமன்ன வார்குழற்
கூர்விழி மாதரையே. (24)

(கு - ரை) அறுகு ஆர் (ஆத்தி) அரவு அணி. குறுகார் அரணம் - பகைவருடைய மதில்களை . எரித்தோரது. பதமலர்க் கோகனகம் - திருவடித் தாமரை மலர்களை. பெறு - பெறுவாயாக. கார் அரவத் திரை போல் - கரிய முழக்கத்தையுடைய (கடலின்) அலைகளைப்போல். திரை - அலை. மறு-மறுப்பாயாக. காரன்ன குழலையும் அரமன்ன விழியையும் உடைய மாதரை: நிரனிறை.

நெஞ்சே! பதமலர்க் கோகனகத்தைப் பெறு; மாதரை மறு என்க.

தலைவி கூற்று

மாதரை யம்பர மாலயன்
றேடு மணிமுடிப்பொற்
பாதரை யம்பர நல்குதென்
கூழைப் பதியுகந்த
நாதரை யம்பர மைவிழி
பாகரை நான்ருெழுதிப்
போதரை யம்பரம் போய்வனை
போய்க்கண் பொருந்திலனே. (25)

* (பி - ம்) "திரைபோன் மயங்கும்"

(கு - ரை) மா தரை - பெரிய பூமி. அம்பரம் - ஆகாயம். ஆகாயத்தில் அயனும், தரையில் அரியும் தேடும்: நிரல்நிறை. அம் பரம் - அழகிய முத்தியை. அம்பு அரம் மைவிழி - அம்பையும் அரத்தையும்போன்ற மையெழுதப்பட்ட விழிகளையுடைய. ஆவுடை நாயகி. மை விழி: அன்மொழித்தொகை. இப்போது தொழுது. அரை அம்பரம்போய் - இடையிலுள்ள ஆடை நழுவப் பெற்று. வளை - கைவளைகள். கண் பொருந்திலன் - துயிலாதவளானேன்.

சங்கரலிங்கப்பெருமானை அடியேன் தொழுது அம் பரம் போய், வளைபோய்க் கண்பொருந்திலன் என்க.

பாங்கி கூற்று

பொரவியந் தானொலி பொங்கவில்
  வேள்வரும் போதுநின்னைப்
பரவியந் தாதகி கேட்குமென்
  பேதைகண் பார்கருணா
கரவியந் தாதரி யாநின்ற
  பேர்நின் கமலபதத்
திரவியந் தாவென நல்குந்தென்
  கூழைச் சிவக்கொழுந்தே. (26)

(கு - ரை) பொர - போர் செய்தற்கு. இயம் ஒலி பொங்கும்படி; இயம் - வாத்தியம். தான்: அசைநிலை. வில்வேள் - மன்மதன். நின்னைப்பரவி - நின்னைத் துதித்து. அம் தாதகி கேட்கும் - அழகிய ஆத்தி மாலையைக் கேட்பாள். என்பேதை கேட்பாள். கருணாகர! வியந்து ஆதரியா நின்ற பேர் - அன்பர்கள். பதத் திரவியம் தா என - பாதமாகிய பொருளை அருளிச் செய்யவேண்டும் என்று கேட்ப. பதத் திரவியம்: பண்புத்தொகை. கருணாகர! சிவக்கொழுந்தே! கண்பார்.

பாங்கி கூற்று

கொழுந்தா மதிக்குழ விக்கூற்ற
  மாவியைக் கொள்ளைகொள்ள
எழுந்தா மதிக்குங் கொலோவர
  ராசையெந் தாயிதழிச்
செழுந்தா மதிக்குடை யாய்கலை
  போய்வளை போய்த்தியங்கி
அழுந்தா மதிக்குநின் னம்புய
  மாலை யணங்கினுக்கே. (27)

(கு - ரை) கொழுந்து ஆம். மதிக்குழவியாகிய எமன்: "குருக்குங் கலாமதிக் கூற்றம்" (32) என்பர் பின். எழும் - எழாநிற்கும். இதழித் தாம - கொன்றை மாலையையுடையாய்; தாமம் - மாலை. திக்கு உடையாய்; உடை - ஆடை. அழும் - அழுவாள். தா - தந்தருள்வாயாக. மதிக்கப்படுகின்ற நின் அம் புயமாலையை. புயமாலை - தோளில் அணிந்தமாலை.

வரராசை எந்தாய்! தாம! திக்குடையாய்! அணங்கினுக்கு நின்மாலையைத் தா.

தலைவி கூற்று

கோளர வாசனன் சேயூருந்
  தென்றல்கிட் டாதுமணிச்
சாளர வாச லடையா
  ததுமொரு சற்பனைகங்
காளர வாச மலர்ப்பதத்
  தோரெனக் கற்றவரை
ஆளர வாச மெனராசை
  வந்த வருட்கடலே. (28)

(கு - ரை) கேள் - கேட்டருள்வாயாக. அரவாசனன்சேய் - மன்மதன். அரவு ஆசனன்: "இருந்தாற் சிங்காசனமாம்...அணையாந் திருமாற் கரவு" (திவ்விய - முதற்றிருவந்தாதி - 53) "இருப்ப தனந்தனிலெண்ணலில் வைகுந்தத்தென்பர்" (திருவேங்கடத்தந்தாதி - 17). "தண்ணனந்த சிங்காதன" (திருவரங்கத்தந்தாதி). கிட்டாது - அணுகாதபடி. சாளரவாசலை அடையாததும். சேய் - புத்திரன். ஊரும் தென்றல் - ஊர்ந்துசெல்லும் தென்றலாகிய தேர்: "வடக்கோடு தேருடையான்" என்றூர் பிறரும். சாளரம் - பலகணி. சற்பனை - வஞ்சனை: "இலைநெறி சற்பனையே இவருரை சற்பனையே" (அருணைக்கலம் - 74) அ வாசம் மலர்ப்பதத்தார்; அ - அழகிய. என - என்று சொல்லுதற்கு. ஆள் அர - ஆண்டருள்கின்ற அரனே. வரராசையை வாசமென எண்ணிவந்த; வாசம் - இருப்பிடம்: "இயலக ளுக வளமென வாழு மிறைவ" (80) என்பர் பின்.

அர! அருட்கடலே! கேள்.

தலைவி கூற்று

கடவா ரண்முரித் தோன்வர
ராசையிற் கண்ணுதல்வெண்
குடவா ரணமென் குழைக்கா
தழகன் குழகனடி
தடவா ரணமுடி யானளித்
தான்மலர்த் தாமமினி
அடவா ரணமத னுபார்க்க
லாமுன தாண்மையுமே. (29)

(கு - ரை) கடவாரணத்தை; கடம் - மதம். வாரணம் - யானை. வெண்குடவாரணம் - வெண்மையாகிய

குடம்போன்ற சங்கம்; "குடவளைக்குலம்" (நைடதம் - நகரப் - 1) "குடவால் வளையொலி கூர்மாலை" (துறைசைக்கோவை - 161) அடி - அடியை. தடவு ஆரணம் முடியான் - தடவுகின்ற வேதத்தின் முடியையுடையவர். மலர்த்தாமத்தை அளித்தாள். அட வா - அடுதற்கு வருவாயாக: அட என்பதனை முன்னிலையாக்கி இகழ்ச்சிக் குறிப்பாகக் கொள்ளுதலுமாம். ரண மதனு - போரைச்செய்கின்ற மன்மதனே; ரணம் - யுத்தம்: "ரண வேள்" (98) என்பர் பின்.

"செந்தில் வேலனுக்குத், தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள், கண்டா யடாவந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே" என்னும் அருணகிரிநாதரின் வாக்கை நினைப்பிக்கின்றது.

சங்கரேசன் மலர்த்தாமத்தை அளித்தான்; மதனு! அடுதற்கு வா. வந்தால் உன் எண்ணம் பலியாது என்றபடி.

மேகத் தளவு குழல்வே
லிணைவிழி மென்றளிரின்
ஆகத் தளவு நகையாரை
யான்விட் டகன்றுபொழின்
மாகத் தளவுயர் சீராசை
நாதர் மலர்ப்பதத்திற்
போகத் தளவுள மெந்நா
ளெனக்குப் பொருந்துவதே. (30)

(கு - ரை) மேகத்து அளவு குழல் - மேகத்தின் இயல்பே கூந்தல். இணைவிழிவேல். மென் தளிரின் ஆகம். தளிரின்: இன்: ஒப்புப்பொருள். ஆகம்-உடம்பு. தளவுநகை - முல்லையரும்பைப் போன்ற பற்கள். குழலையும் விழியையும் ஆகத்தையும் நகையையும்

உடைய மகளிரை யான் விட்டகன்று. பொழில்-சோலை யானது. மாகத்தளவு - ஆகாயம் வரையில். போகத் தள்ள - போகும்படி செலுத்துதற்கு. எனக்கு உள்ளம் பொருந்துவது எந்நாள். தள்ள, உள்ளம் என்பன தொக்கு நின்றன.

நகையாரை விட்டகன்று மலர்ப்பதத்தில் யான் போகும்படி என்னைச் செலுத்துதற்கு எனக்கு உள்ளம் வயமாவது எந்நாள் என இயைக்க.

பாங்கி கூற்று

பொருந்தந்தி யானனன் றந்தைதென்
கூழைப் புனிதனென்றும்
இருந்தந்தி யான மியற்றுநல்
லோரித யாரவிந்தம்
திருந்தந்தி யாக னிதழிநல்
கானெங்கள் செய்யகுலக்
குருந்தந்தி யாகங் கொடுத்தாள்
இருகைக் குருகையுமே. (31)

(கு - ரை) பொரும் தந்தி ஆனனன் - போர் செய்கின்றயானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளின். இரு தம் தியானம் - பெரிய தம் தியானத்தை. இதயார விந்தம் திருந்து அந்தி ஆகன் - இதயார விந்தம் திருந்துதற்குக் காரணமான அந்திவானம் போன்ற திருமேனியையுடையவர். இதயாரவிந்தம்: தீர்க்கசந்தி. அரவிந்தம் - தாமரை. இதழி - கொன்றைமாலையை. எங்கள் செய்ய குலக்குருந்து - எங்கள் குலத்திற்றோன்றிய மங்கையானவள். குருந்து - குருத்து. குலக் குருந்து என்பது குலக்கொழுந்து என்றதுபோல்வது. இரு கைக் குருகையும் அம் தியாகமாகக் கொடுத்தாள்; குருகு - வளை. தியாகம் - கொடை.

தலைவி கூற்று

குருக்குங் கலாமதிக் கீற்றுவெங்
கூற்றங் குடதிசையில்
இருக்குங் கலாப மயிலனை
யீரென்னை யீன்றநற்றா
யருக்குங் கலாமனங் காணார்கண்
ணீரு மணிந்தசந்தப்
பொருக்குங் கலார விழிபாகர்
கூழைப் புராந்தகரே. (32)

(கு - ரை) குருக்கும் - நிறம்பெற்றுத் தோன்றுகின்ற. குரு - நிறம். கலாமதிக் கீற்று - கலையையுடைய மதியின் கீற்று; கீற்று - பிறை. கீற்றாகிய கூற்றம். குட திசையில் - மேற்றிசையில். கூற்றம் இருக்கும். மயில் அனையீர் என்றது தோழியரை. என்னை ஈன்ற நற்றாயருக்கும் மனம் கல்லாம். கலாம்: தொகுத்தல். சந்தப் பொருக்கும் - சந்தனப் பொருக்கையும். கல்லார விழி பாகர்; கல்லாரம் - கருங்குவளை மலர். புராந்தகர் - திரிபுரங்களை அழித்தவர்.

கலாப மயிலனையீர், மதிக்கீற்றாகிய கூற்றம் குட திசையில் இருக்கும். நற்றாயருக்கும் மனம் கல்லாம். புராந்தகர் கண்ணீரையும் சந்தனப் பொருக்கையும் காணார். யான் யாது செய்வேன்.

பாங்கி கூற்று

தகரம் புனைகுழ லாவுடை
மாது தழைத்தவள
நகரம் புனைவன நாயக
னேமுன் னமன்படரை

நிகரம் புனையும் பொருததன்
றேபொன் னெருங்குமுலைச்
சிகரம் புனையும் சிறுமருங்
காண்மய நீர்ந்திடவே. (33)

(கு - ரை) நகரம் - மயிர்ச்சாந்தை. ஆவுடைமாது தழைத்த வன நகரமாகிய புன்னை வன நாயகனே. நமன் படரை நிகர் அம்பு - மன்மதனுடைய பாணம்; படர் - ஏவலாளர். உன்னையும் பொருததன்றோ: "கடுக்கண்டனையு மலைத்தது மாரன் கடுங்கணையே" (திருப்புகழ் அந்தாதி - 56). பொன் - தேமல். சிகரத்தைப் புல்; புல் - தழுவுவாயாக. நையும் சிறுமருங்கால்; மருங்கு - இடை.

புன்னைவன நாயகனே! மன்மதன் அம்பு உன்னையும் பொருததன்றோ?' இவன் மயல்தீர்ந்திடப் புல்லியருள்க.

வேலா வலைய விடமமு
தாக்கும் விமலதிரி
சூலா வலைய முலைமருங்
காவுடைத் தோகையனு
கூலா வலையம் பயில்வா
ளனையகட் கோதையர்தம்
பாலா வலையகன் றெந்நா
ளடைவனின் பாதத்தையே. (34)

(கு - ரை) வேலாவலையம் - கடலில் தோன்றிய. வேலாவலயம் - கடல்: நிலவிலையம் என்பதுபோல. விடம் அமுது ஆக்கும் - விடத்தை அமுதமாக்கிய: "ஆலந்தானுகந் தமுதுசெய்தானை" (தேவா) 'ஆலத்தினலமு தாக்கிய கோன்' (திருச்சிற்றம்பலக்கோவை-27)

வல் முலை; ஐயம் மருங்கு: நிரனிறை. வல் - சூதாடு கருவி, ஐயம் - சந்தேகம். மருங்கு - இடை. வலையையும் அம்பையும் வாளையும் ஒத்த கண்ணையுடைய. அயில் - கூர்மை. கண்வலை: "மழைத்தடங்கண் வலைவீசும் பெண்ணாசை" (பாசவதைப்பரணி - 237) ஆவலை அகன்று - ஆசையை நீங்கி. நின்பாதத்தை எந்நாள் அடைவன் ?

பாங்கி கூற்று

பாதார விந்த வரராசை
முக்கட் பரமவணங்
காதார விந்த ரணங்களுந்
தூள்படக் காய்ந்தநகை
யாதார விந்தழ லாமுனல்
காய்பொன் னணங்குமுலை
மீதார விந்த விரகா
னலத்தின் வெதும்புவளே. (35)

(கு - ரை) பாதாரவிந்த - திருவடித்தாமரையை யுடையாய். வணங்காதார் - வணங்காதவர்களாகிய அசுரர்கள். அவிந்து, அரணங்களும் தூள்பட. நகையா - சிரிப்பையுடையவனே. தார இந்து - வெள்ளியைப்போன்ற சந்திரன். அழலா முன் - காய்வதற்கு முன்னமே. நல்காய் - அருள் செய்வாயாக. பொன் - தேமல். அணங்கு - தலைவியினது. ஆர - நிறைய. விரகானலத்தின் - பிரிவாகிய அக்கினியினாலே. விரகானலம்: தீர்க்கசந்தி: பண்புத்தொகை. விரகம் - பிரிவுத்துன்பம். அணங்கு வெதும்புவள்.

பாதாரவிந்த! பரம! நகையா! அணங்கு வெதும்புவள்; ஆதலால் நல்காய்.

பாங்கி கூற்று

புவனச் சராசரந் தானுதங்
கூழைப் புனிதனிரா
கவனச் சராசத மின்றியன்
றோர்கதி ராழியளித்
தவனச் சராசன வேள்போர்
விலக்கிலன் றையல்சிவ
சிவனச் சராவு *மிலையோ
வெனுமிளந் தென்றலுக்கே. (36)

(கு - ரை) புவனச்சராசரம் - உலகிலுள்ள சரமும் அசரமும்: திரிபுநோக்கி வல்லொற்று மிக்கது. இராகவன் - திருமால். நச்ச - விரும்ப. ராகவன் ராசதமின்றி நச்ச. அன்று கதிரையுடைய ஓர் ஆழியை அளித்தவன். அ சராசன வேள் - அந்த வில்லையுடைய மன்மதனது. சராசனம் - வில். தையல் - தலைவி. சிவசிவ: இரக்கக்குறிப்பு. "சிலையோ கரும்புபொரு கணையோ வரும்புசிவ சிவவாவி யொன்று முளதோ, இலையோ" (மதுரைக்கலம்பகம்-83). நச்சு அராவும் - விஷத்தை யுடைய பாம்பும். நச்சு - நஞ்சு: வலித்தல். எனும் - என்று சொல்லுவாள். தென்றலுக்கு - தென்றற்காற்றை உண்பதற்கு. இளந்தென்றல் - மந்தமாருதம்.

புனிதன், அளித்தவன், வேளின் போரை விலக்கிலன். தையல், தென்றலையுண்பதற்கு அவர் அணிந்த பாம்பும் இல்லையோ என்பாள்.

---

*(பி - ம்) "இலையோ வருமிளந் தென்றலுக்கே"

தலைவி கூற்று

தென்மலை யத்தமிழ் தேர்வர
ராசையிற் *செல்வருயர்
பொன்மலை யத்த மிசைதரித்
தோர்புண்ட ரீகன்புட்பா
கன்மலை யத்த மிருதா
மரையருள் காரணர்கா
மன்மலை யத்தமி யேற்கரு
ளார்கொன்றை மாலையுமே. (37)

(கு - ரை) தென்மலையம் - பொதியில் மலை. பொன்மலை - மேரு மலையாகிய வில்லை. அத்தம் மிசை - கையின் மேல். புண்டரீகன் - பிரமன். புட்பாகன் - திருமால். மலைய - சூடிக்கொள்ளும்படி. தம் இருதாமரை - தம்முடைய திருவடித் தாமரைகளிரண்டையும். காரணர் - நிமித்தகாரணமாவுள்ளார். காமன்-மன்மதன். மலைய - போர் செய்யாநிற்க.

செல்வர், தரித்தோர், காரணர், கொன்றை மாலையைத் தமியேற்கு அருளார்; அதனால் காமன் மலைகின்றான்.

செவிலி கூற்று

மாலை யிராவணப் பாகன்
பணிவர ராசைநம்பர்
வேலை யிராவணற் செற்றோர்க்
கிறையவர் வெற்பில்வெய்ய

---

*(பி - ம்) "செம்மலுயர்"

பாலை யிராவணப் பைங்கோதை
சென்றனள் பார்க்கினங்கோர்
சோலை யிராவணற் கெவ்வாறு
பின்பு தொடர்ந்தனளே. (38)

(கு - ரை) மால் - பெருமையையுடைய. அயிரா வணப்பாகன் - இந்திரன். அயிராவணம் - ஐராவதம்: "உயரயி ராவண வாகனத் தோன்முத லும்பர்" (திருமயிலைத் திரிபந்தாதி - 20) வேலை இராவணன் - கடல்சூழ்ந்த இலங்கையிலுள்ள இராவணனை; வேலை: ஆகுபெயர். செற்றோன் - இராமன். பாலை - பாலை நிலத்தில். இரா வண்ணப் பைங் கோதை - இராத் திரியின் நிறத்தையுடைய கூந்தலையுடையாள். இரா - இராது. அன்னாற்கு - தலைவனுக்கு.

நம்பர், இறையவர் இவரது வெற்பிற் பாலைநிலத் திற் கோதை சென்றனள். அங்கே சோலை இராது; எவ்வாறு தொடர்ந்தனள்.

தொடரும் பலபிணி தீரநெஞ்
சேயொன்று சொல்குவன்கேள்
இடரும் பலபய மென்னுமுன்
காத்தவ னேத்தும்விண் மேற்
படரும் பலவு புடைசூழுங்
கூழை பரவுபிறை
அடரும் பலதுக் கியமனம்
மேல்வர வஞ்சுவனே. (39)

(கு - ரை) இடர் உம்பல் - முதலையினால் துன் பத்தையடைந்த கசேந்திரன். உம்பல் - யானை. அப யம் - அடைக்கலம். காத்தவன் - திருமால். படரும் - செல்லும். பலவு - பலாமரங்கள். ஏத்தும் கூழை

என்க. பிறை அடரும் - பிறையைவென்ற. பல் அதுக்கி, யமன் நம்மேல்வர அஞ்சுவன்.

நெஞ்சே! கேள். கூழையைப்பரவு. பரவினால் யமன் நம்மேல்வர அஞ்சுவன்.

தலைவனுடன் சென்ற தலைவியை நினைந்து
இரங்கிய செவிலிக்கு மிக்கோர் ஏதுக்காட்டல்

அஞ்ச மனைய வுமையாள்பின்
னேகி னசல*முந்நீர்
கஞ்ச மனையவள் பின்னேகி
னேகு கலங்குவதென்
நெஞ்ச மனையயன் மால்பணி
கூழை நிமலர்வெற்பில்
வெஞ்ச மனையடர் கண்ணனு
மவ்வண்ண மேவுவனே. (40)

(கு - ரை) அஞ்சம் — அன்னப் பறவையை. அசலம் - இமயமலை. அசலம் உமையாள் பின்னே ஏகின். முந்நீர் - பாற்கடல். கஞ்சம் மனையவள் - தாமரையை இருப்பிடமாகவுடைய திருமகள். முந்நீர் திருமகளின்பின் ஏகின். ஏகு - நீயும் தலைமகளின் பின்னே செல்வாயாக. அனை - அன்னையே. அன்னையே ! நெஞ்சம் கலங்குவது ஏன் ? சமனை அடர்க் கும் கண்ணையுடையவனும்; சமன் - இயமன்.

சிவபெருமானை மணந்து சென்ற உமாதேவியின் பின் இமயமலையும், திருமாலை மணந்துசென்ற திரு மகளின்பின் பாற்கடலும் சென்றிருக்குமாயின் நீயும்

*(பி - ம்) "முன்னீர்"

தலைவியைத்தேடிப் பின்செல்லுதலும் இரங்குதலும் பொருந்தும் என்றபடி. மணந்த மகளிர் கணவன் பின் செல்லுதல் உலக இயல்பு. ஆதலால், நீவருந்தா தொழி என்பது கருத்து.

" சங்க மலைக்குந் திருப்பாற் கடலைுத்து தான்பயந்த
செங்க மலைக்குமுன் பிற்சென்ற தோமின்னும் செம்மலும்
பங்க மலைக்கு வழங்கு பிரான்புக லூர்பயில்வார் [போய்ப்
துங்க மலைக்குமி தொக்கும்." (புகலூரந்தாதி - 36)

மேவிய கங்கை புனையும்
பிரான்மலர் வேதியனூன்
பாவிய கங்கையி லேற்றிரந்
தோன்மென் பணிலம்வராக்
கூவிய கங்கைய லாரஞ்
சொரிதரும் கூழைசென்ற
வாவிய கங்கை மடவார்
கலவி மயக்கத்தையே. (41)

(கு - ரை) மலர் வேதியன் - பிரமனது. ஊன் பாவிய கம் - தசை நிறைந்த தலையில். பணிலம் - சங்கங்கள். வரா - வந்து. கூவிய - முழங்கினவாகி. கங்கு அயல் - வயல் வரம்பின் பக்கத்தில். ஆரம் - முத்தை. பணிலம் சொரிதரும். சென்று அவாவி. அகம்-மனமே: விளி. மயக்கத்தைக் கை; கை - வெறுப் பாயாக. அகமே! பிரான், இரந்தோனது கூழை சென்று அவாவி. மயக்கத்தைக் கை என இயைக்க.

மயங்கத் தராதல மங்கையர்
கைப்பலி வாங்குமணிப்
புயங்கத் தராதவன் பல்லுகுத்
தோர்வரைப் பூவைமுலை

முயங்கத் தராதர வுண்டுதென்
கூழையின் முத்தமிழ்கொண்
டியங்கத் தராதவர் பாலெனெஞ்ச
மேயென்கொ லேற்பதுவே. (42)

(கு - ரை) தராதல மங்கையர் மயங்க. தராதலம் - பூமி. பலி - பிச்சை. மணிப்புயங்கத்தர் - மணிகளை யுடைய பாம்பை அணிந்தவர்; புயங்கம் - பாம்பு. ஆதவன் பல் - சூரியன் பல்லை. வரைப்பூவை - உமா தேவியாரது. முயங்கு அத்தரது ஆதரவு தென்கூழை யில் உண்டு. முத்தமிழ்கொண்டு - முத்தமிழ்ச் செய்யுட் களை இயற்றிக்கொண்டு. இயங்க - இயங்குதற்கு. ஏற்பது - இரப்பது.

நெஞ்சமே! கூழையில், புயங்கத்தர், உகுத்தோர், அத்தரது ஆதரவுண்டு; தராதவர்பால் முத்தமிழ் கொண்டு ஏற்பது என்கொல்?

'பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்' என்ற சுந்தரமூர்த்தி சுவாமி கள் தேவாரத்தை நினைப்பிக்கின்றது.

கிளிவிடு தூது

ஏற்றின னுக வனத்தன்முன்
போயிவ் வினம்பிறைவெண்
கீற்றின னுக வனத்தந்
தருமென் கிருபையொடு
சாற்றின னுக வனத்தத்
தாய்சம்ப ராரிவந்து
தோற்றின னுக வனத்தவ
ளாருயிர் சோருமென்றே. (43

(கு - ரை) நாக வனத்தன் - புன்னை வனத்தான். பிறையாகிய வெண் கீற்றுனது. இனனுக அனத்தம் தரும் - சூரியனுகத் தோன்றித் துன்பத்தைத் தரும்; இனன் - சூரியன். அனத்தம் - அனர்த்தம். என் - என்பாயாக. இன்னல் சாற்று - துன்பத்தைச் சொல். இனல்: தொகுத்தல். நாக வனத்த தத்தாய் - நாகப் பச்சையின் நிறத்தையுடைய கிளியே; வன்னம் - வர்ணம். சம்பராரி - மன்மதன். ஆ: ஐயோ. கவனத்தவள் - மிக்க கவலையையுடையவளது.

தத்தாய்! நாகவனத்தன் முன்போய்ப் பிறைக் கீற்று இனனுக அனத்தம் தரும் என்பாயாக. பின்னும் சம்பராரி வந்து தோற்றினன்; அதனுல் கவனத்தவள் உயிர் சோருவாள் என்று இன்னலை அருளொடு சாற்றுவாயாக.

பாங்கி கூற்று

சோர்வரு மந்த ரதியனை
யாள்கொண்டு தோகையன்னீர்
தேர்வரு மந்த ரவிவரல்
பார்க்குந்தெள் கூழையிற்புள்
ஊர்வரு மந்தர நாதனும்
போற்ற வுருகியருள்
கூர்வரு மந்தரத் திண்புய
மாலை கொடுத்திலரே. (44)

(கு - ரை) அருமந்த ரதி அனையாள் சோர்வு கொண்டு. ரவி வருதலைப் பார்ப்பாள்; ரவி - சூரியன். புள் ஊர்வரும் - கருடப்பறவையையும் அன்னப்பறவையையும் ஊர்பவர்களாகிய திருமாலும் பிரமதேவரும்.

அருள்கூர்வரும்-அருள்கூர்பவராகிய சங்கரர்; உம்மை: அசைநிலை; உயர்வு சிறப்புமாம். மந்தரமலை போன்ற திண்ணிய புயத்தில் அணிந்துள்ள மாலையை.

சூரியன் வருதலைப்பார்த்தல் இரவு நீடு பருவரல் நீங்க; இரவு நீடு பருவரல் என்பது புறத்திணையி லுள்ள பெண்பாற் கைக்கிளையில் ஒருதுறை.

தோகை யன்னீர்! ரதி அனையாள் சோர்வு கொண்டு ரவி வரலைப் பார்க்கும்; கூழைநாதர் மாலை கொடுத்திலர்.

கொடுங்கலி யானைநெஞ் சேயெறி
வான்பவக் குன்றினைவே
ரொடுங்கலி யானை யுகைத்தோன்றென்
கூழை யுகந்தபிரான்
கடுங்கலி யானை கரும்புணக்
கண்டவன் காசினிசூழ்
நெடுங்கலி யானைய னத்திபங்
காளனென் னித்தமுமே. (45)

(கு - ரை) கலித்துன்பத்தால் நைகின்றநெஞ்சே! கலி - வறுமை. பவமாகிய குன்றினை வேரொடும் கல்லி எறிவான்; பவம்-பிறவி. ஆனை-இடபத்தை. மதுரையிற் கல்லாலாகிய யானை கரும்பை உண்ணச் செய்தவன். நெடுங் கலி ஆம் நயனத்தி - உமாதேவியார். கலி - கடல். நயனம்-கண். என் - என்பாயாக.

நெஞ்சே! நித்தமும் எறிவான், உகைத்தோன், பிரான், கண்டவன், பங்காளன், என்றுசொல்வாயாக.

பாங்கி கூற்று

நித்தம் பயிலர தென்கூழை
வாழு நிமலமத
மத்தம் பயில கரவணிந்
தோய்மத வேள்விடுத்த
கொத்தம் பயில வருமா
வியைமைக் குவளைவிழி
தத்தம் பயில விதழியெவ்
வாறு தரித்திடுமே. (46)

(கு - ரை) நித்தம் = நிருத்தம் - நடனம்: 'நிருத்தம் பயின்றவன்' (திருச்சிற் - 62) மதமத்தம் - ஊமத்தம்பூவையும்: 'கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம், உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானூர்' (தேவா) பய் இலகு அரவு; பய்=பை - படம்: 'பயிலத்தி மேவித் துயில்கூ ரரங்கர்' (திருவரங்கத்தந்தாதி - 49) பையில் = பயில்; இது முதற்போலி. கொத்து அம்பு: எழுவாய்; பூங்கொத்தாகிய அம்பு என்க. அம்பு ஆவியை அயிலவரும்; அயில - உண்ண. வேள் - மன்மதன். கொத்து அம்பு என்றது ஐந்து மலர்ப் பாணங்களை. விழி தத்து அம்பை - கண்ணீரை. இலவு இதழி - இலவம்பூவைப்போன்ற இதழையுடைய தலைவி.

அணிந்தோய்! வேள் விடுத்த அம்பு ஆவியை அயில வரும்; விழி தத்து அம்பை இதழி எவ்வாறு தரிப்பாள் ?

தலைவி கூற்று

இடுவந்தி யாயுரைக் கும்பனி
நீரென் றிறைப்பர்வெந்நீர்
கொடுவந்தி யாழ்மொழி நல்லார்
பொருங்கொடி யோனையின்னும்
அடுவந்தி யாநின்ற பேர்க்கருள்
கூழை யமலவசைக்
கடுவந்தி யார்பொறுப் பார்வெறுப்
பாமிடுங் கைவந்தியே. (47)

(கு - ரை) யாய் இடுவந்தி உரைக்கும்; இடுவந்தி - குற்றமில்லாதவர் மேல் குற்றத்தை ஏற்றிச் சொல்லும் சொல்: 'பொற் கொல்லனது நெஞ்சம் இடுவந்தி கூறுதலைப் புரிந்துநோக்க' (சிலப்பதி - 16: 117 - 20: அடியார்) என்பதையும் அதன் அடிக் குறிப்பையும் பார்க்க. கொடுவந்து - கொண்டுவந்து. நல்லார் - தோழிமார். நல்லார் வெந்நீரைக் கொடுவந்து பனிநீர் என்று இறைப்பர். கொடியோனை - மன்மதனை. அடு — அடுவாயாக. வந்தியாநின்ற பேர்க்கு - வணங்குபவர்க்கு. வசைக் கடு - பழிமொழியாகிய விஷத்தை. வந்து: உரைநடை; பரிமேலழகருரையிலும், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ...க்கிலும், வழக்கிலும் இச்சொல் மிகவும் காணப்படும். ...கவந்தி - தோளில் அணியப்படும் ஆபரணம்: ... வணங்கிறைப் பணைத்தோள் ... ... வயக்குறு வந்திகை'' (மதுரைக்காஞ்சி - 414-5 அடி) என்பதனையும், அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

வந்திக் கமலங் கவிர்சடை
மேல்வையை மண்சுமந்தோர்
நந்திக் கமல மணிசொரி
கூழைமி னம்பர்மதத்
தந்திக் கமலங் கலையொழித்
தோன்பணி சங்கரரென்
றுந்திக் கமல முதித்தோன்
விதிப்ப தொழிநெஞ்சமே. (48)

(கு - ரை) வந்திக்கு - செம்மனச் செல்வி என்னும் பிட்டுவாணிச்சிக்கு. அம் அலங்கு - ஆகாய கங்கைநீர் விளங்குகின்ற. அம் - நீர். நந்து இக்கு - சங்கமும் கரும்பும். அமலம் - குற்றமின்மை. மணி - முத்துக்களை. சங்கமும் கரும்பும் முத்துக்களைச் சொரியும் என்க. மதத்தந்தி-கஜேந்திரன். கம் மலங்கலை - நீரில் மயங்குதலை. நீரில் மயங்குதலாவது முதலையால் கௌவப் பட்டுத் துன்புறுதல். ஒழித்தோன் - திருமால். என்று- என்று துதித்து. உந்திக்கமலம் உதித்தோன் -பிரமன். விதிப்பது - இனிப்பிறப்பிப்பதை.

நெஞ்சமே! சுமந்தோர், நம்பர், சங்கரர் என்று சொல்லிப் பிறத்தலை ஒழிப்பாயாக.

பாங்கி வெறிவிலக்கியது

ஒழியா யிரங்கலை யோவிய
மேயென் றுரைத்துதவீர்
விழியா யிரம்படைத் தோன்பணி
கூழை விமலர்பைந்தார்

பழியா யிரண்டு மருப்போ
டொருத்தனைப் பார்ப்பதென்மால்
வழியா யிரந்தக னீரன்றி
வேறில்லை மங்கையரே. (49)

(கு - ரை) இரங்கலை ஒழியாய். ஓவியமே - சித்திரம் போல்வாய். விமலர் பைந்தாரை உதவீர். விழி ஆயிரம் படைத்தோன்-இந்திரன். பழி ஆய் - குடிக்குப் பழி உண்டாகும்படி; ஆய் - ஆக. இரண்டு மருப்பு ஓது ஒரு தனை - இரண்டு மருப்புக்களையுடைய சொல்லப்படுகின்ற ஆட்டினை; மருப்பு - கொம்பு. ஒருதனை - ஒருவை. ஒரு - ஆடு: "ஒருத்திக்கொருவன் பகையோ" (தனிப்பாடல்). பார்ப்பது என் - வெட்டப் பார்ப்பதற்குக் காரணம் யாது? மால் வழி ஆயிர் - மயக்கம் தோன்றிய வழியை ஆராயாமல் இருக்கின்றனிர். மால் - மயக்கம். ஆய்தல் - ஆராய்தல். நீர் அந்தகன் அன்றி - இந்த ஆட்டுக்கு நீர் அந்தகனைவுள்ளீரே யல்லாமல்; அந்தகன் - யமன். மங்கையரே என்றது செவிலித்தாய் முதலிய ஐவரையும் நோக்கி.

மங்கையரே! தாரை உதவீர்; ஒருத்தனைப் பார்ப்பது ஏன்? ஆயீர்; நீர் அந்தகன் அன்றி வேறில்லை.

பாங்கி கூற்று

மங்கைக்கு வாம *மளித்தருள்
கூழை வரதவிளங்
கொங்கைக்கு வாமதி யொன்றோ
பகை ‡யொரு கோடிகெட்டேன்

* "(பி-ம்) அளித்தவர் கூழை" ‡"ஒரு கோடியன்றோ"

சங்கைக் குவாமங்கை பெற்ற
எவள்பெற்ற தானையிவள்
அங்கைக்கு வாம மணற்சிறு
கூட லளித்ததுவே. (50)

(கு - ரை) மங்கைக்கு - உமாதேவியாருக்கு; வாமம்-இடப்பாகத்தை. இளங்கொங்கைக்கு-தலைவிக்கு இளங்கொங்கை: அன்மொழித்தொகை. உவாமதி ஒன்றோ பகை-கலை நிரம்பிய சந்திரன் ஒன்று மட்டுமா பகை? உவாமதி - பூரணசந்திரன். கெட்டேன்-ஐயோ. சங்கை - இவள் வளையல்களை. கு ஆம் மங்கை - பூமி யாகிய மடந்தையானவள்; கு - பூமி. வளையல்கள் நழுவிப் பூமியில் விழுந்து விட்டன என்றபடி. அவள் பெற்றதானை என்றது கடலினை; தானை - ஆடை. இவள் அங்கைக்கு - தலைவியினது கைகளுக்கு. வாமம்-அழகு. மணற்சிறு கூடல் - மணலில் எழுதப்படும் சிறியகூடற் சுழியினை. பூமியாகிய பெண்ணுக்கு இவள் வளையல் களை அளித்தாள். அவள் ஆடையாகிய கடல் இவள் கூடற்சுழி எழுதுவதற்கு மணலை அளித்தது.

இது பரிவருத்தனை அணி.

வரத! தலைவிக்கு மதி ஒன்றுதானா பகை? வேறு கோடிபகைகள் உள்ளன. உம்முடைய விரகத்தால் இவள் கைவளையை இழந்தாள்; கடற்கரையிலிருந்து மணலிற் கூடற்சுழியைச் சுழிக்கின்றாள்; இரங்கியருள வேண்டும்.

மீண்டுவரும் தலைவன் பாகனுக்குக்கூறல்

அளித்தடங் காவி யலர்விழி
யாவுடை யம்மைபங்கர்
நளித்தடங் *காவியல் சார்கூழைச்
சங்கரர் நாட்டெழுகார்
களித்தடங் காவிய மன்கா
ணதைக்கடுந் தேர்விடுத்தே
தளித்தடங் காவி யருள்வல
வாவொரு தையலுக்கே. (51)

(கு - ரை) அளியையும் காவி அலரையும் போன்ற விழியையுடைய. அளி - வண்டு. காவி அலர் - நீலோற் பலமலர். நளி தடம் கா - குளிர்ச்சியையுடைய தடமும் காவும்; தடம் கா: உம்மைத் தொகை. நாட்டு-நாட்டில். கார்-மேகமானது. களித்து அடங்கா இயமன் காண். அதை - அம்மேகத்தை. தள்ளித் தடு; தள்ளி: தொகுத் தல் விகாரம். வலவா - தேர்ப்பாகனே. தையலுக்கு அங்கு ஆவி அருள்.

வலவா! நாட்டில், கார் இயமன்காண்; அதைத் தடு; தையலுக்கு ஆவியை அருள். நீ விரைந்து செல் என்பது கருத்து.

தைய லருந்தளிர் மேற்சரு
காமிவ டன்னுயிரை
†மைய லருந்த லறுவதெந்
நாண்மதி போலொளிரச்

* (பி - ம்) "காவியல் சூழ் கூழை"
† (பி - ம்) "மைய லருந்த வருவதென்னும்"

செய்ய லருந்தண் கமலமுத்
 தீனுந்தென் கூழைப்பிரான்
கைய லருந்த வருமுனம்
 வேடனைக் காய்ந்தவனே. (52)

(கு - ரை) தையல் அருந்தளிர் மேல் சருகு ஆம் - தலைவி தளிர்ப்பாயலின்மீது காமவெப்பத்தால் சருகு போல்கின்றாள். இவள் உயிரை. மையல் - மயக்கம். ஒளிர - ஒளிரும்படி. செய்யில் அலரும் கமலமானது முத்தை ஈனுகின்ற. ஒளிர முத்தீனும். செய் - வயல். கமலம் - தாமரை. பிரான்: விளி. கையிலுள்ள அலர் கணை உந்துதற்கு வேள் வருமுன்னமே; கை அலர் உந்த - கையிலுள்ள மலரம்புகளைச் செலுத்தும் பொருட்டு. வேள் - மன்மதன்; வேள்தன்னை.

கூழைப்பிரானே! காய்ந்தவனே! இவள்உயிரை மையல் அருந்துதல் நீங்குவது எக்காலம்? அருள வேண்டும் என்றபடி.

பாங்கி கூற்று

காயந் தகன முருமுன
 மாவிகைக் கொள்ள நம்மை
ஆயந் தக*னமர் செய்யாமுன்
 கூழை யானைமதம்
போயந் தகனவ னென்னவெய்
 யோன்கண் பொதுத்தவனை
நேயந் தகனளி னத்தான்
 பணிய தினைநெஞ்சமே. (53)

* (பி - ம்) "அமர் செல்லா முன்"

(கு - ரை) காயம் - உடம்பு. தகனம் உருமுனம் - சுட்டெரித்தற்கு முன்பே. ஆவி கைக்கொள்ள - உயிரைப் பற்றிக்கொள்ள. ஆய் - ஆய்கின்ற. அந்தகன் அமர் செய்யாமுன்; அந்தகன் - யமன். மதம்போய் - செருக்குக்கெட்டு. அவன் அந்தகன் என்ன - குருடன் என்று சொல்லும்படி. வெய்யோன் கண் - பகன் என்னும் சூரியனுடைய கண்ணை. பொதுத்தவனை - துளைத்தவனை. நேயம் தக - அன்பு பொருந்த.

நெஞ்சமே! காயம் தகனம் உருமுன்னம், அந்தகன் அமர் செய்யா முன்னம் அரனது தாளைப்பணிய நினை.

தலைவன் வறுங்களம்நாடி மறுகல்

நினைவா ரிதய நிறைந்திருப்
 பார்புன்னை நீழலுற்றோர்
கனைவாரி தன்னில் விடம்வாரி
 யுண்டருள் கண்டர்வெற்பில்
எனைவா ரிதமுற வேயுரைப்
 பார்பச் சிளங்கிளிகாள்
தினைவா ரிதணிற் சிலநா
 ளிருந்த திருந்திழைக்கே. (54)

(கு - ரை) நினைவார் - நினைக்கின்ற அடியார்களுடைய. கனை வாரி - முழங்குகின்ற கடல். என் நைவு - என்னுடைய தளர்ச்சியை. இதம் உற ஆர் உரைப்பார். தினை வார் இதணில் - தினைப்புனத்தேயிருந்த நீண்ட இதணின்மீது. இதண் - பரண்.

கிளிகாள்! என் நைவைத் திருந்திழைக்கு ஆர் உரைப்பார்.

பாங்கி கூற்று

இழையா வையுமிழந் தாளென்செய்
வானிரங் காள்கருணை
மழையாவை யுற்பல மைவிழி
பால்வர ராசையெந்தாய்
தழையாவை யுன்னத வெற்பான்
மழையைத் தடுத்தளித்தோன்
குழையாவை யுற்ற கதிராழி
வேண்டக் கொடுத்தவனே. (55)

(கு - ரை) இழை யாவையும் - ஆபரணங்களை யெல்லாம். இரங்கு ஆள் - இரங்குவாயாக; ஆள்வா யாக. உற்பலம் - கருங்குவளை. மை விழி - தலைவி. மைவிழிபாற் கருணை வை. தழை ஆவை - தழைத்த பசுக்களை. உன்னத வெற்பால் - உயர்ச்சி யுள்ள கோவர்த்தனகிரியால். ஆவை அளித்தோன் - திரு மால். குழையா வேண்ட - குழைந்து பிரார்த்திக்க. ஆழி - சக்கரத்தை. வை - கூர்மை. கதிர் - ஒளியை வீசுகின்ற. வேண்ட ஆழி கொடுத்தவனே.

எந்தாய்! கொடுத்தவனே! மை விழிபால் இரங்கு, ஆள், கருணை வை.

தவமணி மாலொழி யேற்கருள்
பாந்தட் சடிலகவுத்
துவமணி மார்ப புவனமும்
வானுஞ் சுடரென நிற்
பவமணி மாக மனந்தோய்செம்
மேனிய பச்சைவண்ண
நவமணி மாளிகை சூழ்கூழைச்
சங்கர நாரணனே. (56)

(கு - ரை) தவம் மன்னனி - தவத்தைச்செய்து: மன்னனி - பண்ணனி: "ஆவுதி மன்னனி" (மதுரைக் - 494) என்பதன் உரையைப்பார்க்க. பாந்தள் சடில: பாந்தள் - பாம்பையணிந்த. சடிலம் - சடை. கவுத்துவ மணியை அணிந்த மார்ப. புவனமும் வானும் சோதி வடிவங்கொண்டு நிற்பவனே: "சோதியே சுடரே" (திருவாசகம்) புவனம் - பூமி. மண் இ மாகம் அளந் தோய் - மண்ணையும் இந்த மாகத்தையும் அளந்த வனே; மாகம் - ஆகாயம். மால் ஒழியேற்கு: வினையா லணையும் பெயர்.

இதில் சங்கரர் நாராயணர் ஆகிய இருவருடைய செயல்கள் முறையே கூறப்பட்டுள்ளன.

சங்கர நாராயணனே! அருள்.

பாங்கி கூற்று

நார மறுகு வளைமதி சூடிய நாகவனத்
தோர மறுகு வளைகவர்ந் தாரினிச் சொல்வதென்
*பார மறுகு வளையோ விவள்படு பாவிமதன் [மால்
ஈர மறுகு வளைதனக் காரிங் கெதிர்நிற்பரே. (57)

(கு - ரை) நாரத்தையும் அறுகையும் மதியையும் சூடிய. நாரம் - நீர்; கங்கை. நாகவனத்தோர். அம் மறுகு - அழகிய வீதியில். சொல்வது என் - சொல்வது யாது. மால் பாரம் - மயக்கம் பாரமாக உள்ளது: "உயிர் தவச் சிறிது காமமோ பெரிதே" (குறுந் - 18) இவள் ஐயோ மறுகுவள். படுபாவியாகிய மன்மதனது. ஈரம் அறு குவளை தனக்கு ஆர் இங்கு எதிர் நிற்பர்.

---

* (பி - ம்) "பார மறுகு வளைபோ விவள்படு"

குவளை கொலைப் பாணம் என்பது இங்கே அறியற் பாலது. ஈரம் - இரக்கம். "முழுநீலம், கொல்லு மத னம்பின் குணம்"

பாங்கி கூற்று

எதிராடி யங்க மிலானென்செய்
வான்மை யெழுதுகண்முத்
துதிராடி யங்க மதியழ
லாதொளிர் பூணணிந்து
கதிராடி யங்கலை பார்க்குநின்
மாலைகண் டாற்சுடலை
அதிராடி யங்கணா தென்கூழைச்
சங்கர வற்புதனே. (58)

(கு - ரை) எதிர் - எதிரே. ஆடி - போர் செய்து. அங்கமிலான் - மன்மதன்; அனங்கன். அங்கமிலான் எதிராடி என்செய்வான். கண்முத்து உதிராள் - கண்ணீரை வீழ்த்தாள்; தியங்கும்படி மதியானது வெம்மையைத்தாராது. பூணை அணிந்து ஆடியை அங்கனை பார்ப்பாள்; ஆடி - கண்ணாடி. அங்கனை - பெண்; என்றது தலைவியை. அதிர ஆடியவனே: "அதிர வீசி யாடுவாய்" (திருஞான - தே) அதிர: அ தொகுத்தல் விகாரம். அற்புதம் - ஞானம்.

ஆடியவனே! அங்கணனே! சங்கர! அற்புதனே! நின்மாலையைத் தலைவி காண்பாளாயின், அங்கமிலான் என்செய்வான்? இவள்கண்முத்துதிராள்; மதி அழலாது; இவள் ஆடியைப் பார்ப்பாள்.

அற்புத வந்தரி யேத்திய
கூழை யமலவிம
வெற்புத வந்தரி யோடுமென்
னெஞ்சகம் வீற்றிருக்கப்
புற்புத வந்தரி பூண்முலை
யார்க்கன்பு பூண்டமயற்
கற்புத வந்தரி யார்புரம்
போலென்று காண்பதுவே. (59)

(கு - ரை) அற்புத, வந்து அரி ஏத்திய; அரி - திருமால். இம வெற்பு - இமயமலை. உதவு - பெற்ற. அந்தரியோடும் - உமாதேவியாரோடும். தேவரீர் வீற்றிருக்க. புற்புதம் - குமிழியைப்போன்ற. அம் தரி - அழகைத்தரித்த. புற்புதம் கொங்கைக்கு உவமை. மயல் கல் புதவம் - மயக்கமாகிய கற்புதவம்; கற்புதவம்- கல்லாலாகிய கதவு. தரியார் - பகைவரது.

அற்புத! அமல! அந்தரியோடும் என் நெஞ்சகம் வீற்றிருக்க, மயல் கற்புதவம் புரம்போல் இல்லையாதலை என்று காண்பது? தேவரீர் என் நெஞ்சில் வீற்றிருந்தால் என்மயல் நீங்கிவிடும் என்பது கருத்து.

பாங்கி கூற்று

காணு திருவ ரடிமுடி
தேடுங் கனகசபை
வாணு திருவர ராசையெந்
தாய்செம் மணிப்புயங்கப்
பூணு திருவர மாதனை
யாண்மயல் பூண்டுநிறை
பேணு திருவர வேல்விழி
யார்வசை பெற்றனளே. (60)

(கு - ரை) இருவர் - பிரம விஷ்ணுக்கள். பிரமன் முடியையும், விஷ்ணு அடியையும் காணப்பெறாமல் தேடுகின்ற. கனகசபை வாணா, செம்மணிகளையுடைய புயங்கமாகிய ஆபரணத்தை யுடையாய்; புயங்கம் - பாம்பு. திருவாகிய வர மாதை அனையாள் - தலைவி. நிறை - மறைபிற ரறியாமை: "நிறையெனப்படுவது மறைபிற ரறியாமை" (கலி. 133: 12) அரத்தையும் வேலையும் போன்ற இருவிழிகளையுடைய பெண்டிர் கூறுகின்ற. வசை - பழிமொழியை.

கனகசபை வாணா! எந்தாய்! பூணா! திருமாது அனையாளாகிய இவன் நிறையைப் பேறாமல்வசையைப் பெற்றனள்; அருள்வாயாக.

தலைவி கூற்று

பெற்றத் திலக வுலாவரு
வாரென் பிழைமதிபின்
பற்றத் திலக நுதல்பாகர்
கூழைப் பரமர்நிலா
முற்றத் திலக மகிழ்வோடு
மென்னை முயங்கியல
கற்றத் திலக மளவுமெண்
ணாரென்ன கற்பனையே. (61)

(கு - ரை) பெற்றத்து - இடபத்தில். என் மதி பின்பற்ற உலாவருவார். திலகநுதல் - உமாதேவியார்: அன்மொழித்தொகை. நிலா முற்றத்தில் அகமகிழ்வோடும். அல் அகற்ற - இருளைப் போக்குவதற்கு. திலகம் அளவும் - குன்றுமணியளவும்; திலகம் - ஒரு வகைக் குன்றுமணி. என்ன கற்பனை - என்னவிதி; கற்பனை - ஏற்பாடுமாம்: "கற்பனை யத்தனை யென்பிற விக்கு" (புகலூரந்தாதி - 32)

பாங்கி கூற்று

கற்பகக் காநிழ லுற்றோன்
பணிசங் கரநமனு
டற்பகக் காலிமிர் தென்கூழை
வாணா திவாகரனிற்
பொற்பகக் கானிற்கும் வெண்ணில
வாலம் பொதியவுயர்
வெற்பகக் காலில விற்கொடி
தாமிந்த மெல்லியற்கே. (62)

(கு - ரை) கற்பகக்கா நிழல் உற்றோன் - இந்திரன். கா - சோலை. நமனுடைய உடல்பகும்படி; பக - பிளவு படும்படி. கால் நிமிர் - திருவடியை உயர்த்தருளிய. திவாகரனில் - சூரியனைப்போல. பொற்ப - பொலிவுடையவரே. (சந்திரன்) கக்கா நிற்கும் வெண்ணிலவு ஆலம்; கக்குதல் - வெளிப்படுத்தல். வெண்ணிலவாகிய ஆலத்தைஎன்க. சந்திரன்: தோன்றா எழுவாய். பொதிய உயர் வெற்பகக் கால் - தென்றற் காற்று. நிலவின் - நிலவைக் காட்டிலும். மெல்லியல் என்றது தலைவியை.

மெல்லியலாகிய இத்தலைவிக்குச் சந்திரன் வெண்ணிலவை வெளிப்படுத்துவான். காமத்தை நிலவு அதிகரிக்கச்செய்யும். தென்றற்காற்று அந்த நிலவைக் காட்டிலும் துன்புறுத்துவதாம்.

தன் பதியடைந்தமை தலைவன் தலைவிக்குச் சாற்றல்

இயலரு காவணஞ் சங்கத்தி
லேறு மிறைவர்நறை
பெயலரு காவணங் கன்பர்க்குன்
ளாரித்தப் பெற்றிசெய்யார்க்

கயலரு காவண மேனியர்
கூழை யணிநகர்சூழ்
வயலரு காவணங் காண்கடந்
தேம்வெய்ய வன்சுரமே. (63)

(கு - ரை) இயல் - இயற்றமிழ். அருகாவணம் - குறையாதவாறு. சங்கத்தில் ஏறும் இறைவர் - சங்கத்திலே தாமும் ஒரு புலவராகத் திருமேனிகொண்டு ஏறிய சிவபெருமான். நறை பெய் அலர் உகா வணங்கு அன்பர்க்கு; உகா - உகுத்து. நறை பெய் அலர் - தேனொழுகும் மலர். செய்யார்க்கு அயலர். உகா வண்ணம் - கெடாத அழகையுடைய. வயல் அருகு ஆவணம் காண் - வயலருகேயுள்ள கடை வீதியாகும் இது. வன் சுரத்தைக் கடந்தேம்.

பாங்கி உலகியலுரைத்தல்

வன்னி கரந்தை யறுகா
ரரவ மதிமுடித்த
சென்னி கரந்தையம் பெய்வோனைக்
காய்ந்தவன் சிற்றிடைதான்
மின்னி கரந்தைய லோர்பாகன்
கூழை விமலன்வெற்பா
கன்னி கரந்தை வரவெல்ல
லாஞ்சிலைக் காமனையே. (64)

(கு - ரை) வன்னி - வன்னிபத்திரம். கரந்தை - சிவகரந்தை. ஆர் அரவம் மதி - ஆத்தியையும் பாம்பையும் சந்திரனையும். சென்னி - திருமுடியையுடையார். கரந்து ஐ அம்பு எய்வோனை - ஒளித்திருந்து மலரம்புகள் ஐந்தையும் செலுத்திய மன்மதனை. சிறு இடை மின் நிகர் அம் தையல் - உமாதேவியார்:

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 10232

சிற்றிடைக்கு மின்ன[illegible] உவமை. தான்: அசை [illegible].
கன்னியின் கரம் தை[illegible]ரச் சிலைக்காமனை வெ[illegible]ம்:
கன்னியின் கரம் தை[illegible] தலைவியின் கை[illegible]ற்றி
னால்; பாணிக்கிரகண[illegible] என்ப[illegible]த்து.
தைவர - தடவ: இங்கே [illegible]

0-12N,5
N69

காமனம் பாவிடர் கொண்டுமின்
னூர்முலை கண்டுமயங்
காமனம் பாவிலைக் கண்டுயில்
வோன்கம லாசனனைங்
காமனம் பாவிளங் கன்னிவைத்
தோயென்று கைதொழுதற்
காமனம் பாவி யெனுங்கூழை
வாழ்கறைக் கண்டனையே. (65)

(கு - ரை) காமன் அம்பால். இடர் கொண்டு - துன்புற்று. மின்னூர் - மின்னற் கொடிபோன்ற பெண்களுடைய. மயங்காமல் நம்பு. ஆல் இலைக்கண் துயில்வோன் - திருமால். கமலாசனன் - பிரமதேவர். ஐந்து காமன் - இந்திரன். அழகிய பக்கத்தில் இளங் கன்னியை வைத்தோய். என்று தொழுதற்கு ஆம் மனத்தைப்பாவி. எனும் - என்று திருமால் முதலியவர்கள் பிரார்த்திக்கும்.

நெஞ்சே! கறைக்கண்டனை நம்பு.

தலைவன் வண்டோச்சி மருங்கணைதல்

கண்டலம் போதிரண் டானவர்
கூழையிற் கண்ணுதலார்
கண்டலம் போதிகழ்ந் தோர்சங்க
ரேசர் கனவரைமேற்

கண்டலம் போதிசொல் மென்கோதை
மைவிழிக் கன்னியிடை
கண்டலம் போதி யளிகா
ளிருக்கக் கருதுகவே. (66)

(கு - ரை) கண் தலம் போது இரண்டு ஆனவர்: போது - சந்திர சூரியர்: போது: ஆகுபெயர். கண்டல் அம் போது - தாழம்பூவை. கண்டுசொல், அல் கோதை, அம்போதி விழி: நிரனிறை; கண்டு - கற்கண்டு. அல் - இருள். அம்போதி - கடல். கோதை - கூந்தல். கன்னியின் இடையைக் கண்டு. ஓதியிலுள்ள வண்டுகளே! இருக்க - கூந்தலில் இருக்க. இடையின் மென்மையைக் காணின் நீர் கூந்தலில் இருக்கமாட்டீர் என்றபடி.

கருமங் கவலை நெறியால்வந்
தெம்மைக் கலக்கவெழு
கருமங் கவலைநெஞ் சேவர
ராசைக் கதிரவனி
கருமங் கவலை நதிசூடி
யென்றுகை கூப்புவதே
கருமங் கவலை யினிவேறு
வைக்கக் கடவதன்றே. (67)

(கு - ரை) கருமம் - வினைகள். கவலை நெறியால் - கவர்த்த பல வழிகளால். கலக்க - கலந்துகொள்ளுதலால். எழு கரு மங்க - எழுகின்ற பிறவியானது மங்கும்படி. வல்லை - விரைவாக. வர ராசையிலுள்ள. கதிரவன் நிகரும் அங்க! அலை நதியைச் சூடியவரே! என்று வல்லை கைகூப்புவதே கருமம். இனி, வேறு கவலைவைக்க. கடவது அன்று - உனக்கு உரித்தன்று.

தலைவி கூற்று

கடந்தந் தனமென் முலைமருங்
காள்பங்கர் காவில்வண்டு
கடந்தந் தனமென் றிசைபாடுங்
கூழைக் கறைமிடற்றூர்
கடந்தந் தனவெற்பை மீறும்
புயத்தர் கடுக்கைநல்கார்
கடந்தந் தனங்க மெனவரும்
பாவிக் கருங்கங்குலே. (68)

(கு - ரை) கடம் - குடம். தந்து - நூல். மருங்கு - இடை. கடம் அன்ன முலை; தந்து அன்ன மருங்கு: நிரனிறை. மருங்காள் - உமாதேவியார். காவில் - சோலையில். வண்டுகள் தந்தந்தனம் என்று இசை பாடும்: தந்தந்தனம் - தாளக்கட்டு. கறை - விடம். அம் தன வெற்பை - மேருவை; தனம் - பொன். வெற்பைக் கடந்து மீறும் புயத்தர். கடுக்கை - கொன்றை மாலையை. கடு - விடம். அந்து - ஒருவகைப்பூச்சி. அந்தன் - இயமன். பாவிக் கருங்கங்குல் கடு முதலியவற்றின் அங்கம்போலே வரும் என இயைக்க.

கறைமிடற்றூர் நல்கார்; கங்குல் வரும்.

பாங்கி கூற்று

கங்குலை மாலை யனையமென்
கோதை கலாமதியம்
கங்குலை மாலை யனலதன்
மேன்மெழு கானதென்னங்

கங்குலை மாலைய னோர்கூழை
நர்பரெக் காலமயக்
கங்குலை மாலை யருள்வரென்
றேயழுங் கண்பிசைந்தே. (69)

(கு - ரை) கங்குலை - இருளை. மாலை - மேகத்தை. மென்கோதையை யுடைய தலைவி, மதியம் கங்கை உடைய உலை ஆகும்; கங்கு - பக்கம். மாலை அனல்: "அழல் போலு மாலைக்கு" (குறள் 1228). அதன் மேலுள்ள மெழுகாயிற்று என் அங்கம். குல்லை மால் அயன் - திருத்துழாயை அணிந்த திருமாலும் பிரமனும்; குல்லை: தொகுத்தல் விகாரம். ஓர் - உணருகின்ற. மயக்கத்தைக் குலைக்கின்ற மலர்மாலையை நம்பர் எக்காலம் அருள்வர். கண்பிசைந்து அழுவாள்: "கண் பிசைந்தொருசே யின்னும் கலுழினும்" (பிரபு: கைலாச கதி - 5).

தலைவன் மேகத்தொடு கூறல்

கண்ணிக் கரும்புயர் மால்வரை
தோள்சொன்ன கைகொங்கைவேற்
கண்ணிக் கரும்புய பார்மெலி
யார்கம ழுந்துளவக்
கண்ணிக் கரும்புய லோர்பாகர்
கூழைக் கமலவயற்
கண்ணிக் கரும்புய நோக்காது
சேரல்வெங் *கார்முகிலே. (70)

(கு - ரை) கண் - கணுக்களையுடைய மூங்கில்: ஆகுபெயர்; வரை என்பதுபோல. இக்கு - கரும்பு.

*(பி - ம்) "கார்முகமே"

வரை - மலை. கண் - தோள்; இக்கு - சொல்; முல்லையரும்பு - நகை. மால்வரை - கொங்கை: நிரனிறை. வேற்கண்ணிக்கு - வேல்போன்ற கண்ணையுடைய தலைவிக்கு. ஆர்புயம் மெலியார். துளவக்கண்ணியையுடைய கரும்புயல் - திருமால். கரும்புயல் ஓர் பாகர் - சங்கரநாராயணர். கண்ணி - சிறுவாய்க்கால்: "தெறுகு தலைக்கணி வாய்க்கால் பெருகும் திருமயிலை" (திருமயிலைத் திரிபந்தாதி - 87) கண்ணியையுடைய வயலிற் றோன்றிய கரும்பு - தலைவி. உய்ய - பிழைக்கும்படி. உய்ய என்பது நோக்காது என்னும் எதிர்மறை வினையெச்சத்தின் முதனிலையோடு முடிந்தது.

கார்முகிலே! சேரல்.

காரங் கடுக்க மயிலாடுங்
கூழைக் கடவுளந்த
காரங் கடுக்க வளர்கோதை
பாகனென் காமவெவ்வி
காரங் கடுக்க மொழிநெஞ்ச
மேவெங் கணைபடுபுண்
காரங் கடுக்க யமவாதை
யுற்றிடுங் காலத்திலே. (71)

(கு - ரை) கார் அங்கு அடுக்க; அடுக்க - அடுத்தலால். அந்தகாரம் கடுக்க - இருளைக் கோபித்தற்கு. என் - என்பாயாக. காம வெவ் விகாரங்கள் துக்கம் ஒழி நெஞ்சமே! கணை படு புண்ணில் செருகும் காரச்சீலையை. கடுக்க - ஒப்ப. யமவாதை உற்றிடும் காலத்தில்.

நெஞ்சமே! யமவாதை உற்றிடும் காலத்தில் கூழைக்கடவுள், பாகன் என்பாய்; காமவிகாரங்களையும் துக்கத்தையும் ஒழி.

மடல் ஏறுதலைத் தலைவன் தன்மேல்வைத்துச் சாற்றல்

காலங் கனலந் தரநிலை
மானவர் கண்ணின்மணி
காலங் கனலங் கழனியி
ராசைக்கங் காளர்கங்குற்
காலங் கனலம் புலிதுரந்
தாவிநல் காதிருந்தக்
காலங் கனலம் பெறவரைந்
தேகிழி கைக்கொள்வனே. (72)

(கு - ரை) கால் - காற்று. அம் - நீர். கனல் - தீ. அந்தரம் - ஆகாயம்; பஞ்சபூதமாக உள்ளவர். கண்ணில் - கணுக்களில். மணிகால் - முத்துக்களைக் கக்குகின்ற. அம் கன்னல் - அழகிய கரும்புகளையுடைய. கழனி - வயல். கங்குற்கால் அங்கு - இரவினிடத்தே. அம்புலி அனலைத் துரந்து. ஆவி - என் உயிராகிய தலைவியை. கங்காளர் ஆவியை நல்காதிருந்தக்கால். அங்கம் நலம்பெற வரைந்து - தலைவியின் உருவத்தை அழகு அமைய எழுதி. கிழி கைக்கொள்வன்: கிழி - படம். மடலேறுவேன் என்றபடி.

கூழைக்கங்காளர் திருவருளால் தலைவியைப் பெறேனாயின் மடலேறுவேன் என்பது கருத்து.

கைக்கய மன்றுரி தென்கூழைச்
சங்கர காபத்துத்தி
கைக்கய மன்று ணடிக்கும்
பிரானென்று கைதொழுமேற்

கைக்கய மன்றொடர் காலமெக்
காலமக் காலமருள்
கைக்கய மன்று மனமே
யொழியுங் கருக்குழியே. (73)

(கு - ரை) கயம் - யானையை. அன்று உரித்த. கா - காத்தருள்க. பத்துத் திகைக்கு ஐய; திகை - திசை. ஐய - தலைவனே. பிரான் - பிரானே. தொழு - தொழுவாயாக. மேல் - பின்பு. கைக்க - வெறுக்க - யமன் தொடர்காலம் எக்காலமோ அக்காலத்தில். அருள்கைக்கு - அவர் அருள் செய்வதற்கு. ஐயம் அன்று - சந்தேகம் இல்லை; அன்று என்பது இன்று என்னும் பொருளில் வந்தது.

மனமே! தொழு; அருள்கைக்கு ஐயமின்று; கருக்குழி ஒழியும்.

தலைவி கூற்று

கருந்தா ரணிகுழல் பங்காளர்
கூழைக்கங் காளர்பொன்ன
கருந்தா ரணியு மயனு
முராரியுங் காண்பரியார்
கருந்தா ரணிமதற் காய்ந்தோ
ரிளங்களி வண்டுகணு
கருந்தா ரணியலென் கைத்தா
மரைவரக் காண்கிலனே. (74)

(கு - ரை) தாரணி கருங்குழல் - உமாதேவியார். தார் அணி கருங்குழல்: அன்மொழித்தொகை. தார் - மாலை. குழல் - கூந்தல். பொன்னகரும் - பொன்னுல

கத்தில் உள்ளவரும். தாரணியும் - பூமியில் உள்ளவர்களும். இவை இடவாகுபெயர்கள். முராரி - திருமால். அயன் - பிரமன். காண்பு அரியார். கரு தார் அணி - பெரிய கொடிப்படையையுடைய; கருமை - பெருமை. தார் - கொடிப்படை. அணி - படைவகுப்பு: "ஒன்னார், தாரணி தானவம்செய்தான்" (திருவரங்கத்தந்தாதி-5) வண்டு கள் நுகரும் - வண்டு கள்ளை நுகருகின்ற. தார் - பூ. அணியல் - மாலை. காய்ந்தாரது அணியல் வரக் காண்கிலன் என இயைக்க.

பாங்கி கூற்று

காணப் பதஞ்சலி யாடிய
கூழைக் கடவுட்கஞ்ச
நாணப் பதஞ்சலி செய்வலென்
றோடி நடந்ததெல்லாம்
வீணப் பதஞ்ச லிகலா
முனக்கவர் மீதுமையல்
பூணப் பதஞ்சலி யா நின்ற
தென்னினிப் பூங்கொடியே. (75)

(கு - ரை) பதஞ்சலி காண ஆடிய கடவுட்கு. அஞ்சம் நாண - அன்னப்பறவை நாணும்படி. பத்து அஞ்சலி செய்வல் என்று; பத்து: தொகுத்தல்விகாரம். "பதஞ்சலி யாதரைக் காகங் கொடார்" (திருவேரக யமகவந்தாதி - 19) நாண நடந்ததெல்லாம் என இயைக்க. அப்பது-அம்புகளும்; அது: பகுதிப்பொருள் விகுதி. அஞ்சு அல் - அஞ்சப்படுகின்ற இருளும். அஞ்சு அப்பு - ஐந்து அம்புகளுமாம். உனக்கு இகலாம்; இகல் - பகை. அவர்மீது மையல் பூண - அவர் மீது மயக்கம் பூணுதலால். பதம் சலியாநின்றது.

என் - இதற்குக் காரணம் யாது? இனி - இப்பொழுது. ஓடி நடந்ததெல்லாம் என்றதனால் பதம்சலித்தல் பெறப்பட்டது.

முன்னர் அஞ்சலி செய்யப்போனது பயனற்ற செயல்; மீண்டும் போதற்கு முயல்கின்றது யாது என்பது கருத்து.

பூங்கொடியே! பதஞ்சலியா நின்றது என்?

பாங்கி கூற்று

பூங்கமு காரஞ் சொரிகூழை
நம்பர்பொற் றளின்மலர்
ஆங்கமு காரகஞ் செல்லார்
சிலம்பினி னங்கைவளை
நீங்கமு காரவிந் தஞ்சரு
காக நினைத்துமனம்
ஏங்கமு கார விசைத்தீ
விளைக்கு மிளங்குயிலே. (76)

(கு - ரை) கமுகு - பாக்குமரம். ஆரம் - முத்துக்களை. முத்துப் பிறக்கும் இடங்களில் கமுகும் ஒன்று. மலரையும்; ஆம் கம் - மேன்மேலும் ஊறுகின்ற தீர்த்தத்தையும். பொற்றளில் உகாத சிறியவர்களுடைய. அகம் - மனத்தில். நின் அங்கை வளை நீங்க. முக அரவிந்தம் - முகமாகிய தாமரைப்பூ. மனம் ஏங்க - உன்னுடைய மனமானது ஏங்க. முகார இசை - முழக்கத்தையுடைய இராகம். முகரம் - முழக்கம்: நீட்டல் விகாரம்; முகாரி ராகத்தையே முகாரம் என்னூர் என்றலுமாம். இசையாகிய தீயைக் குயில் விளைக்கும்.

முத்துப் பிறக்கும் இடங்களாவன: "தந்தி வராக மருப்பிப்பி பூகஞ் சலஞ்சலம்" என்னும் பாடலால் அறிக.

பாங்கி கூற்று

குயிலாய மாமனை யுள்ளிருந்
தாவியைக் கொள்ளைகொள்ள
அயிலாய மாமனை யப்பனை
வாவென் றழைப்பதுபார்
கயிலாய மாமனை யன்றடுங்
கூழைக் கடவுளுவ
மயிலாய மாமனை யாவுடை
மாதிடம் வைத்தவனே. (77)

(கு - ரை) குயில் ஆயம் - குயில் கூட்டங்கள். மா மனையுள் - மாமரமாகிய வீட்டினுள்ளே. ஆவியை கொள்ளைகொள்ள - உயிரைப்பறிக்க. அயில் ஆய - கூர்மையை யுடையனவாகிய. மா மன் - வண்டுகள் தங்கப்பெற்ற. ஐ அப்பனை - ஐந்து மலர்ப்பாணங்களை யுடைய மன்மதனை. ஐ அப்பனை: அம்பனை - அம்பை உடையவனை: வலித்தல் விகாரம். அயிலாய அம்பு என்க. குயிலாயம் அழைப்பது பார்: "சூர மாங்குயிற் சின்னங்கள் காமத் துரைவந் தான்றுரை வந்தானென் றூத" (திருக்குற்றாலக் குறவஞ்சி - 46). கயிலாய: விளி. மாமனை - தக்கனை. கடவுள்: விளி. உவமை இல்லாய் - உவமையில்லாதவனே. அம் மா மன்னை - அழகிய திருமகளின் தலைவராகிய திருமாலை. ஆவுடை மாது - ஆவுடையநாயகி.

கயிலாய! கடவுள்! வைத்தவனே! குயிலாயம் மன்மதனை அழைப்பது பார்.

வையக மத்தனையுந் *தனி
யாள வறினுமவை
பொய்யக மத்தனை யானனன்
கூழைப் பொருப்புவில்லி
துய்யக மத்தனை சிற்றிடை
பாகன் துணைப்பதமா
மெய்யக மத்தனை வோர்க்கும
தேயன்றி வேறில்லையே. (78)

(கு - ரை) வையகம் அத்தனையும் - உலகம் முழுவதையும். தனி - பொதுவற. அவை - அச்செல்வங்கள். பொய்ய-பொய்ம்மையாக உள்ளன. கம் அத்தன் - கபாலத்தை அணிந்த திருக்கரத்தையுடையார்: அத்தம் - கை. ஐ ஆனனன். பொருப்பு வில்லி - மேரு வில்லையுடையார். துய்ய கமத்தன்: கமம் - நிறைவு. ஐ - தலைவன். மெய் அகம் அத்தம் - மெய்ம்மையை யுடைய இடமேபொருள்; அத்தம்=அர்த்தம்-பொருள். நைவோர்க்கும் - நைந்திருக்கும் வறிஞர்களுக்கும்: உம்மை இறந்தது தழுவியது. அதே அன்றி - அந்தச் செல்வமே அல்லாமல்.

செல்வர்க்கும் வறிஞர்க்கும் அவருடைய திருவடிகளே உண்மையிடமான பொருள் என்பது கருத்து.

இல்லை யரும்பவ மெந்தைதென்
கூழை யிறைநடனம்
அல்லை யரும்பவ னுலமுண்
டோனருட் சோதியென்று

* (பி - ம்) "தனியான வறினுமது"

சொல்லை யரும்ப வசமழி
யாமுனந் தோகையரை
முல்லை யரும்பவர் மூரலென்
றோடி முயங்குநெஞ்சே. (79)

(கு - ரை) அரும் பவம் இல்லை. அரும் பவம் - போக்குதற்கரிய பிறப்புக்கள். நடனத்தை அல்லில் அயரும் பவன்; அயரும் - செய்யும். பவன் - எல்லாம் பிறத்தற்குக் காரணமானவன்: "பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்தால்" (தேவா), "பவன் பிரம சாரியாகும் பான்மொழி கன்னியாகும்" (சித்தியார்). என்று சொல். ஐ அரும்ப - கோழை கண்டத்தில் தோன்ற. அம் தோகையரை நோக்கி என ஒரு சொல் வருவிக்க. அவர் மூரல் முல்லை அரும்பென்று. ஐ அரும்ப வசம் அழியாமுன்: "ஐய மருந்தியக் கங்குறு காமுனரங்கர்க் கன்பாய், ஐய மருந்தியும் வாழ்மின்கண் மேலுமக் கானந்தமே" (திருவரங்கத் தந்தாதி - 19) ஐ அரும்ப - கோழை தோன்றுதலால். வசம் அழியாமுன் - தன் வசமிழப்பதன் முன்னரே. தோகையரை - மகளிரை. அவர் மூரல் முல்லை அரும்பு: மூரல்-பற்கள். முயங்கும் - அனுபவிக்கும்.

"முல்லை முகைமுறுவல் முத்தென் றிவைபிதற்றும்" (நாலடி)

எந்தை, இறை, பவன், உண்டோன், சோதி என்று சொல். நெஞ்சே! வசம் அழியாமுனம் சொல்.

முயலக னாக முரியநின் றாடி முதுபலிதேர்
செயலக னாக முனிக்களித் தோய்சந்த்ர சேகரனே
இயலக னாக வனமென வாழு மிறைவவென்றே
மயலக னாக ரிகமாதர் மீதின் மடநெஞ்சமே. (80)

(கு - ரை) முயலகனுடைய ஆகமானது முரியும் படி; முரிய - நெரிய. ஆடி - விளி. பலி - பிச்சை. செயல் - செயலையுடையாய். கல் நாகம் முன் - கல்லானைக்கு முன்பு. இக்கு அளித்தோய் - கரும்பைக் கொடுத்தவனே. இயல் அகம் - இலக்கணம் பொருந்திய வீடு. நாகவனம் - புன்னைவனம். நாகவனம் இயலகம் என வாழும் இறைவ: "வாசமெனராசை வந்தவருட்கடலே" (28) என்றார் முன்னும். என்று - என்று சொல்லி. மயல் அகல்.

நெஞ்சே! ஆடி, செயல, அளித்தோய், சந்த்ர சேகரனே, இறைவ என்று சொல்லி மாதர்மீதுள்ள மயலை அகல்.

தலைவன் தலைவியைப் புகழ்தல்

மடங்கலை வாரண மாய்ப்பது
போல மதர்விழியீர்
நுடங்கலை வாய்த்த மருங்குலை
மாய்க்கு நுமதுமுலைத்
தடங்கலை வாரில்லை யேலுயிர்
கொண்டெவர் தாமிருப்பார்
முடங்கலை வாரிநஞ் சுண்டோர்தென்
கூழை முகில்வரைக்கே. (81)

(கு - ரை) மடங்கலை - சிங்கத்தை. வாரணம் - யானை. சிங்கத்தை யானை மாய்ப்பதுபோல: இல்பொருளுவமை. நுடங்கலை-அசைதலை. மருங்குலை-இடையை. மாய்க்கும் - தேயச்செய்கின்ற. முலைத்தடம் - கொங்கை: எழுவாய். கலை வார் இலையேல் - கலையாலாகிய கச்சு இல்லையாயின். எவர் உயிர் கொண்டிருப்பார். முடங்கு அலை - வளைந்த அலைகளையுடைய. வாரி நச்சு - கடல் விடம்; நச்சு=நஞ்சு: வலித்தல்.

இது. குலோத்துங்க சோழன் கோவையிலுள்ள "மட்டார் குழலி" (செ. 65) என்னும் செய்யுளையும், "உருகுவாருயிர் படுபடாமுலே யுழறுமேலுல கிறுமெனத், திருகுவார் முசி விசிவிடாதவர் திறமினேகடை திறமினே" (தக்கயாகப்பரணி - 32) என்பதையும் போன்றது.

வரைக்கே கயமொரு பங்காளர்
கூழை வரதர்வெற்பில்
இரைக்கே கய நதி போங்குரு
கேயன் றிறைவர்சொன்ன
உரைக்கே கயருமென் செய்தியெல்
லாமங் குரைத்தருளித்
தரைக்கே கயமனச் சந்த்ரோ
தயமன்றித் தானிலேயே. (82)

(கு - ரை) கேகயம் - மயில்; இங்கே உமாதேவியார். இரைக்கு - இரையைத்தேடி யுண்பதற்கு. கயம் - குளம். குருகே - நாரையே. அன்று - கண்டகாலத்தில். இறைவர் - தலைவர். ஏகு - ஏகுவாயாக. அயரும் என் செய்தி யெல்லாம் உரைத்தருள்: அயரும் - யான் துன்பமுறும். இத்தரைக்கு - இத்தரையை மாய்த்தற்கு. ஏக யமன் - ஒற்றையமன்: ஏகம் - ஒன்று. அந்தச் சந்த்ரோதயமே யமன்.

தானவ ரப்புரங் காய்ந்தவர்
கூழையிற் சங்கரர்மால்
ஆனவ ரப்புரங் காட்டிய
வேளுடற் கங்கியிட்டோர்

ஞானவ ரப்புரம் பெற்றடி
போற்றுநற் றொண்டர்தம்மை
மானவ ரப்புரந் தென்னையங்
கான மதிப்பதென்றே. (83)

(கு - ரை) தானவர் - அசுரருடைய. புரம் - புரங்களை. மால் ஆனவர் - திருமாலாகிய இடபத்தையுடையவர்; ஆன் - இடபம். அப்பு உரம் - அம்பின் உரத்தை; அப்பு - அம்பு. உரம் - வலிமை. வேள் - காமவேள். உடற்கு - உடலை வேகும்படி செய்தற்கு. அங்கி - நெருப்பை. அங்கி - சட்டையென்று பொருள் கொண்டால், உடலுக்கு அங்கியிட்டோர் என்னும் ஒரு நயம் தோற்றுகின்றது. ஞானவரப்பு - ஞானமாகிய வரம்பு. உரம் - வலி. மான - ஒப்ப. வர - தம்பால் அடியேன் வர. புரந்து - பாதுகாத்து.

காய்ந்தவர், சங்கரர், அங்கியிட்டோர் என்னை ஆன மதிப்பது என்று.

மதியா தவனிரு கண்ணுருங்
கூழை வரதர்வெற்பில்
விதியா தவனிறைந் தோர்க்கும்
விதித்தவெங் கூற்றெனவே
உதியா தவனிதை யெங்கே
யுதித்த துறையுமிவர்
பதியா தவனிகொல் லோவிசும்
போவென் பகர்கின்றதே. (84)

(கு - ரை) மதி ஆதவன் - சந்திரனும் சூரியனும். விதி - பிரமனானவன். ஆ - ஐயோ. தவம் நிறைந்தோர்க்கும் விதித்த, வெங்கூற்றெனவே உதியாத வனிதை - யமன் என அன்வயங் கொண்டு தோன்றுத

வனிதை: விதித்த வனிதை: உதியாத வனிதை: கூற்றெனத் தோற்றமில்லை யாயினும் செயலால் அவனையொப்பாள் என்பது கருத்து. "பல்லுயிர் பருகும் பகுவாய்க் கூற்றம், ஆண்மையிற் றிரிந்துதன் அருந்தொழில் திரியாது......பெண்மையிற் றிரியும் பெற்றி" (சிலப்பதி - 5:219-23) என் பகர்கின்றது - என்ன சொல்வது.

திணை: கைக்கிளை. துறை: ஐயம்.

தலைவி கூற்று

பகலவ னங்கண் பதித்தோர்தென்
கூழைப் பரமர்வில்வேள்
இகலவ னங்க னெனவிழித்
தோர்வெற்பி லெண்ணியன்பர்
*அகலவ னங்க யரும்படி
சேரு மவசமெல்லாம்
புகலவ னங்க ளிலையோ
வவர்முனம் பூவையரே. (85)

(கு - ரை) பகலவன் - பகன் என்னும் சூரியனுடைய: "பகன்று மரைக்கண் கெடக்கடந்தோன்" (திருச்சிற் - 184), "உன்னைப் புகுந்த பகனொளித் தோடாமே, கண்ணைப் பறித்தவா றுந்தீபற, கருக்கெட நாமெலா முந்தீபற" (திருவாசகம்) "தட்ச யக்ஞ விநாசத்து வந்த ஆதித்தனுடைய கண்ணை ஈசுவரன் பறித்தருளினதை; "பகாட்ச ஹரः" என்பது" மகா

* (பி - ம்) 'அசல வனங்க சரம்படி சேரும்'

கானஸ்தவம், வில் வேள் - கரும்பு வில்லையுடைய மன்மதன். இகல - மாறுபட. அனங்கன் என - உடம்பு இல்லாதவனாக. அன்பர் அகல. அல் - இருளும். நங்கு-பழிமொழியும். "நங்கஞ்சும் திருவடிவுனை" (ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் வாக்கு) "துங்கஞ்சார்". அயரும்படி - யான் துன்பமுறும்படி. சேரும் - சேர்தலால் உண்டாகிய. அவர் முன்னம் புகல - அவர் முன்னே தூதாகச் சென்று சொல்லுவதற்கு. அனங்கள் - அன்னப்பறவைகள். பூவையர் - தோழிகள்.

பாங்கி தலைவனை நகுதல்

பூவைய மாதவன் றேடுபொற்
பாதர்பைம் புன்னைவனத்
தேவைய மாத ரிடவுகந்
தோர்தென் னிராசைவெற்பிற்
பாவைய மாதனு வில்லைவெம்
போர்செய் பகழியில்லை
மாவைய மாதழை யாலிவர்
தாமெய்த வாறுநன்றே. (86)

(கு - ரை) பூ வையம் - பூமியாகிய வையம்: இருபெயரொட்டு. பூ: பொலிவுமாம். மாதவன் - திருமால்; மா தவன் - இலக்குமி கணவன். புன்னைவனத்தேவு: தேவு - தெய்வம். ஐயம் - பிட்சையை. மாதர் ஐயம் இட உகந்தோராது வெற்பில். மாதர் - தாருகாவன முனிபன்னியர். பாவை - பாவையே: அம்மா! வியப்பிடைச்சொல். தனு இல்லை; தனு - வில். பகழி - பாணம். மாவை - விலங்குகளை. அ மா தழையால் - அந்தப் பெரிய தழையினாலே. அ: அழகு எனினுமாம்.

பாங்கி கூற்று

வாகைக் கணைகொடு வந்தோனை
வெல்வர ராசையெந்தாய்
தோகைக் கணைகொடுங் கையா
வயருந் துயரமெல்லாம்
போகைக் கணைகொடு செவ்வித
மூல்லது பூங்கடுக்கை
ஈகைக் கணைகொடுங் காம
விகார மெளிதல்லவே. (87)

(கு - ரை) வாகை - பிறரை வென்ற வெற்றியை யுடைய: "வென்றிக் களிற்றை விரிதாரவன் வென்ற வாறும்" (சீவக - 14) என்பதன் உரையைப் பார்க்க. கணை - மலரம்பு. வந்தோனை - வந்த மன்மதனை: வினையாலணையும் பெயர். தோகைக்கு - தலைவிக்கு. கொடுங் கையே அணையாக அயருதற்குக் காரணமாகிய. அணை - தலைக்கணை. அயர்தல் - துன்புறுதல். போகைக்கு அணைவாயாக. செவ்விதழைக்கொடு. கடுக்கை ஈகைக்கு அண் - கொன்றை மாலையை அருளிச்செய்தலுக்கு வருவாயாக. நை - நைதற்குக் காரணமான. அல்ல என்பது ஒருமைக்கும் வரும்.

இரவுக் குறிக்கண் தலைமகளைத்
திருமகளாகப் பாவித்துத் தலைவன் கூறியது

அல்லி யமருங் கமலம்வெய் யோனன்றி யார்
[திறந்தார்
கொல்லி யமருங் கடலாக வேபொருங் கூன்கருப்பு
வில்லி யமருந் தொலையவந் தீசிந்த வெவ்விருளில்
வல்லி யமரு மொருபாகர் கூழை வரையணங்கே

(கு - ரை) அல்லி - அகவிதழ். கமலத்தை வெய்யோனன்றி யார் திறந்தார். வெய்யோன் - சூரியன். கமலம் - தாமரை. அருங்கடல் கொல் இயம் ஆக; இயம் - வாத்தியம். பொரும் - போர்செய்யும். கூன் கருப்பு வில்லி - மன்மதனது. இருளில் வந்தீர். வல்லி அமரும் - உமாதேவியார் விரும்பி எழுந்தருளியிருக்கும்.

"காமரை வென்றகண் ணோன்" (திருச்சிற் - 164) என்ற செய்யுளைப் பின்பற்றி வந்தது இச்செய்யுள்.

நாணிக்கண் புதைத்தல்

அணைங்கர சேபொரு மாமத
யானை யதனையொரு
கணங்கர செல்கரந் தென்னமின்
னார்பொற் கலைகுலையும்
வணங்கர சேகரத் தேற்று
ருமைவனை யாற்றழும்பு
பணங்கர் சேதனர்க் கெய்தார்தென்
கூழைப் பனிவரைக்கே. (89)

(கு - ரை) யானை அதனை - கொங்கையாகிய யானையை. ஒருகணம் - ஒரு கணநேரம். கர - மறைத்துக்கொள்வாயாக. செல் கரந்து என்ன - கன்னூகிய மீனைக் கரத்தலால் வரும் பிரயோசனம் யாது. மின்னார் - தாருகாவனத்து முனிவருடைய மனைவிமார். கலை குலையும் வண்ணம் - இடையிலுள்ள ஆடை நெகிழும் படி. கர சேகரத்து - கையிலுள்ள பிரமன் தலையில். ஏற்றூர் - இரந்தவர். தழும்பு பண் அங்கர் - தழும்பு பண்ணிய உறுப்பையுடையவர். அசேதனர்க்கு எய்தார். அசேதனர் - அறிவிலார்.

யானையதனைக்கர; சேல் கரந்தென்ன: "தொடலை தைஇய மடவரன் மகளே, கண்ணினும் கதவநின் முலையே" (ஐங்குறுநூறு - 361)

பனியாழி யங்கண் பவளச்செவ்
வாய்முத்தின் பத்திநகை
இனியாழி யன்மொழி மின்னார்க்
*கிரங்கல மேத்தரிக்குத்
தனியாழி யன்றருள் கூழைப்
பிரானருட் சாகரத்திற்
குனியா ழியம படர்க்குமஞ்
சேன்மருள் கூர்நெஞ்சமே. (90)

(கு - ரை) ஆழி - கடல். இன் யாழ் இயல் மொழி. கண்ணையும், வாயையும், நகையையும், மொழியையும் உடைய மின்னார்க்கு இரங்கலம். ஏத்து அரிக்கு. தனி ஆழி - ஒப்பில்லாத சக்கரத்தை. அருட்சாகரத்தில் - கருணைக்கடலில். குனி - ஆடுவாயாக. ஆழ் - ஆழ்வாயாக. அருட்சாகரத்திற் குனி, ஆழ், இயமபடருக்கும் அஞ்சேல். இயம படர் - இயமனது ஏவலாளர்.

தலைமகன் பொருள்வயிற் பிரியக் கருதிய வழிப்
பாங்கி தோழிமார்களை நோக்கிக் கூறியது

கூரத் திரவிழி மேன்முத்தும்
பொன்னுங் கொழிக்குமென்றால்
ஆரத் திரவிய மாசைகொள்
வாரம் புலியையந்தி

* (பி - ம்) 'இரங்கல மேயரிக்கு'

நேரத் திரவியென் றெண்ணார்
மருங்கை நெருங்குதன
பாரத் திரவிர் சடையாளர்
கூழைப் பதியன்பரே. (91)

(கு - ரை) கூர் அத்திர விழி மேல் - கூர்த்த அத்திரம் போன்ற கண்களில். அத்திரம் - அம்பு. முத்தும் பொன்னும் கொழிக்கும் என்றால்; முத்து - கண்ணீர்த்துளி: பொன் - பசலை: "ஆய்மல ருண்கட் பசலை"(அகநானூறு 52:14) 'கண் பசலை பூத்தகாமம்' (சீவக - 231) அத் திரவியத்தின் கண் ஆசை கொள் வார் ஆர்; அத் திரவியம்: அ: நெஞ்சறிசுட்டு. அம் புலியை - சந்திரனை. அந்தி நேரத்து இரவி யென்று எண்ணார் கூழைப்பதி யன்பர். மருங்கை நெருங்கு. தனபாரத்திர் - தனபாரத்தையுடைய பாங்கிமார்களே.

இச்சமயத்தில், நீர் பொருள் தேடச் செல்லுதல் பொருந்தா தென்பது கருத்து.

"வானக் கடிமதிற் றில்லை" (திருச்சிற் - 335) என்னும் செய்யுளைப் பின்பற்றி வந்தது இது.

பாங்கி நின்குறை நீயே சென்றுரையென்றல்

அன்பரி வைத்த சரணார விந்த னயன்சிரத்தை
முன்பரி வைத்தனி வாளுகி ரோன்சமண் முற்றுமற
என்பரி வைத்தனு வாக்கித்தன் றந்தை யிராசை
[வெற்பா
நின்பரி வைத்தார் நீயே யவட்கு நிகழ்த்துகவே.

(கு - ரை) அரி அன்பு வைத்த சரணாரவிந்தன் - திருவடித் தாமரைகளையுடையவர்; சரண் - திருவடி.

அரவிந்தம் - தாமரை. முன்பு அரி - முன்னமே அரிந்த. வை தனி வாள் உகிர் - கூர்மையையுடைய ஒப்பற்ற வாள்போன்ற நகம். என்பை. அரிவைத் தது ஆக்கி - பெண்ணின் வடிவமாக்கின திருஞான சம்பந்த மூர்த்தி நாயனருடைய. ஆக்கி: பெயர். வெற்பா - தலைவனே. நின் பரிவை - உன் வருத்தத்தை. தளர் நீயே - தளர்வுற்றிருக்கும் நீயே. நின் பரிவை நீயே நிகழ்த்துக.

வெறியெடுத்தவழிப் பாங்கி செவிலித்தாயை நோக்கி அறத்தொடு நிற்றல்

நிகராலை யஞ்சிலை வாணுதற்
*கென்னுமன் னேமயக்கம்
தகரா லையநுண் மருங்குன்மின்
னூர்க்குத் தணியுங்கொலோ
பகராலை யம்பை யனைகொண்ட
மால்பணி யும்பதத்தார்
மகரா லையவிட முண்டோர்தென்
கூழை வரதருக்கே. (93)

(கு - ரை) ஆலை அம் சிலை - கரும்பாகிய அழகிய வில். "ஆலை வில் வேள் சரத்தாரும் அடர்த்தமதா சலத்தாரும்" (அருணைக்கலம்பகம்) வாணுதற்குச் சிலை நிகர் என்னும் அன்னே. தகரால் - ஆட்டினால். ஐயம் - சந்தேகம். மின்னூர்க்குத் தகரால் மயக்கம் தணியுங் கொல்லோ: தகர் - ஆடு. ஆலை - ஆலிலையை. அம்பை - நீரையுடைய கடலை. அனை - பாயல். மகராலையவிடம் - கடலில் தோன்றிய விடத்தை: மகராலயம் - கடல். வரதருக்குப் பகர்.

*(பி - ம்) 'என்னு மின்னே'

வரந்தரு வார்தென் வரராசை
யீசர் வயங்கியசிந்
துரந்தரு வாவுரி *யாடையர்
மாமலைத் தோகைபங்கர்
நிரந்தரு வாயுரு வாயெங்கு
நின்றரு ளின்மலரோன்
கரந்தரு வாவென்று கோபரை
யேத்துங் கருத்தறவே. (94)

(கு - ரை) சிந்துரம் - யானை. தருவாக உரித்த - மரத்தின் தோலை உரிப்பதுபோல் உரித்த. நிரந்து - நிரம்பி. அருவாய் உருவாய் நின்றருள் நின்மலர். தரு ஆ என்று - கற்பகமே, காமதேனுவேயென்று: தரு கற்பகம் என்னும் பொருளதாய் நின்றது. "தருக் காவலா" (திருவரங்கத்தந்தாதி - 6) "ஓதிமே வேலை வளர்ப்பாய் தருவை யொடித்தெறித்தே" (பழமலை யந்தாதி - 4)

வரராசையீசர், ஏத்தும் கருத்தற வரந்தருவார்; அவரை ஏத்துங்கள் என்றபடி.

இது விற்பூட்டுப் பொருள்கோள்.

செவிலி கூற்று

அறந்திருந் தாநின்ற ராசையெந்
தாயனைக் கென்வயிற்றிற்
பிறந்திருந் தானன்று தொட்டுயர்
வானிற் பிறந்ததிலா

*(பி - ம்) 'ஆடையர் பச்சைக் கவுரிபங்கர்'

நிறந்திருந் தார்புரங் காய்ந்த
நகையென்று நின்றுதன்னை
மறந்திருந் தாதளை பூங்கொன்றை
யொன்று மறந்திலளே. (95)

(கு - ரை) அறம் - தருமம். அணங்கு - தலைவி. இருந்தாள் - கவலையின்றி வளர்ந்துகொண்டு இருந்தாள். அன்றுதொட்டு - தேவரீரைக்கண்ட அன்று தொட்டு; அன்று: நெஞ்சறிசுட்டு. திருந்தார் - பகைவருடைய. நிலாவின் நிறமானது, திருந்தார் புரத்தைக் காய்ந்த நகையிற் றோன்றிய தீயைப் போல்வது: "சுந்தரன் தூதன் சமரிலன்று, பொருந்தார் புரத்திட்ட தீப்போன் மதியம் புறப்பட்டதே" (தனிப்பாடல்). என்று - என்று சொல்லி. தன்னை மறந்து - அவசமாகி. இரு தாது அளைந்த பூங்கொன்றை ஒன்றைமட்டும் மறந்திலள். நற்றாய்க்கும் தனக்கும் உள்ள ஒற்றுமை பற்றி என் வயிற்றிற் பிறந்திருந்தாள் என்றாள்.

திலக மெழுது நுதல்பாகர்
கூழைத் திகம்பரர்க்கன்
பிலக மெழுகி னுருகேம்வெவ்
வேறெய்து மைம்புலனை
விலக மெழுபவ மெவ்வாறிங்
கோயுமண் விண்முதலாம்
உலக மெழுமென் குமிழியென்
பாரதி யுன்னவரே. (96)

(கு - ரை) திலகம் - நெற்றிப்பொட்டு. நுதல் - உமாதேவியார்: அன்மொழித்தொகை. திகம்பரர்க்கு அன்பில் மெழுகின் அகம் உருகேம். திக் அம்பரர் - திக்கை ஆடையாகவுடையார். அன்பில் - அன்பினால் உருபுமயக்கம். மெழுகின்; இன்: ஐந்தாவது ஒப்புப்

பொருள். வெவ்வேறு எய்தும் ஐம்புலனை விலகம்; விலகம் - நீங்கமாட்டோம். எழுபவம் - எழுவகைப் பிறவி. இங்கு எவ்வாறு ஓயும். உலகு அம் எழு மென் குமிழி என்பார். அம் எழு மென் குமிழி - நீர்க்குமிழி; அம் - நீர்.

உள்ள முருக வொழியாத
பாவியுள் ளத்திலுள்ள
கள்ள முருக வருள்வதென்
றோசெங் கமலமுகை
யின்ன முருகலர் கூழைப்
பிரான்விண்ணு ளோர்கள்சிறை
தள்ள முருகனை யீன்றோ
யருள்சிவ சங்கரனே. (97)

(கு - ரை) உருக ஒழியாத - உருகுதற்கு நேரமில்லாத. கள்ளம் முருக - கபடம் கெட: இது முருங்க என்பதன் விகாரம்போலும். முருகு அலர் - மணம் பரக்கின்ற. சிறை தள்ள - சிறையை நீக்க. கமலமுகை - தாமரை மொட்டு.

சிவசங்கரனே! அருள்வதென்றோ?

சங்கர நாரணர் தென்வர
ராசைத் தனிக்குழைவெண்
சங்கர நாரண நம்பான்பின்
னூர்க்குத் தவித்திடுநெஞ்
சங்கர நாரண வேளெரித்
தோர்சது வேதபிர
சங்கர நாரணங் கோர்பாக
ரென்றஞ் சலித்தென்னுமே. (98)

(கு - ரை) தனி குழை வெண் சங்கர் - வெண் சங்கைக் குழையாகவுடைய அரனார். நம்பால் அன்னை. ரண வேள் - போரைச் செய்யும் மன்மதனை. ரணம் - போர். வேதபிரசங்கர்: "விப்பிர சங்கந் தமிழ்வாணர் சங்கம் விளங்குறுகல், விப்பிர சங்கம்" (திருக்குற்றால யமகவந்தாதி) அ நார் அணங்கு - அழகிய அன்பை யுடைய உமாதேவியார். நெஞ்சம் கரம் நா - நெஞ்சமே, கரமே, நாவே. எரித்தோர், பிரசங்கர், பாகர் என்று துதித்து அஞ்சலித்து எண்ணுங்கள்.

இஃது எதிர் நிரனிறை.

நெஞ்சம் : அண்மைவிளி. கரம், நா என்பனவும் விளிகளே.

எய்தனந் தீவிட மானவர் மாமல ரேசன்சென்னி
... ...
... ...
... ... (99)

(கு - ரை) எய்து அனம் தீ விடம் ஆனவர் - எய்திய அன்னத்தை விடமாகப் பெற்றவர். மலரேசன் - பிரமன்.

... ... (100)

குறிப்பு : 99 ஆம் பாடலில் ஏனை மூன்று வரிகளும், 100 ஆம் பாடலும் கிடைக்க என்பர் ஸ்ரீ மகா மகோபாத்தியாய ஐயரவர்கள்.

உ

செய்யுள் முதற்குறிப்பகராதி

[எண் - செய்யுள் எண்]

அஞ்சமனைய	40	கடந்தந்தன	68
அணங்கரசே	89	கடவாரண	29
அரும்பாதகஞ்	10	கண்டலம்போ	66
அல்லியமருங்	88	கண்ணிக்கரும்	70
அளித்தடங்கா	51	கருந்தாரணி	74
அற்புதவந்தரி	59	கருமங்கவலை	67
அறந்திருந்தா	95	கலங்குதலைச்	8
அறுகாரரவணி	24	கற்பகக்கா	62
அன்பரிலைத்த	92	கறையரவம்	11
ஆவிக்குமாவி	5	காணப்பதஞ்சலி	75
இடுவந்தி	47	காணுதிருவ	60
இயலருகா	63	காமனம்பா	65
இல்லையரும்	79	காயந்தக	53
இழையாவை	55	காரங்கடுக்	71
இளந்தென்ற	9	காலங்கன	72
இன்றேனனைய	19	குயிலாய	77
உரைக்கடங்	2	குருக்குங்க	32
உள்ளமுருக	97	குழகரிமா	6
எதிராடியங்க	58	கூரத்திர	91
எய்தனந்தீ	99	கேனரவா	28
ஏற்றினருக	43	கைக்கயமன்	73
ஐயானனத்தன்	16	கொடுங்கலி	45
ஓழியாவிரங்	49	கொழுந்தாம	27
கங்குலைமாலை	69	சங்கரநார	98

கரராசை	23	புவனச்சரா	66
செய்யவம்போ	22	பூங்கமுகா	70
சோர்வரு	44	பூவைய மா	96
ஞானவர	காப்பு	பெற்றத்தி	61
நகரம்புனை	33	பொரவியத்	26
நஞ்சமணி	4	பொருந்தந்தி	31
நவமணிமா	56	போனக	16
நானவரப்	83	மங்கைக்கு	50
நிலகமெழு	96	மடங்கலை	91
தென்மலையத்	37	மதியாதவ	84
தேனுரைக்	3	மங்கத்தரா	42
தையலருந்	52	மாதரை யம்	26
தொடரும்பல	39	மாலைவிரா	38
தொடிகைக்கு	12	முயலகனுக	80
நாரமறுகு	57	முன்னிலங்	15
நிகரால	93	மெல்லியராக	17
நித்தம்பவி	46	மேகத்தனவு	30
நினைவாரி	54	மேவியகல்	41
நேராயனாங்	21	வந்திக்கமல	48
பலைவ	85	வரந்தருவார்	94
பத்திருக்கு	20	வரைக் கேகய	82
பனியாழி	90	வன்னிகரந்	64
பாதாரவிந்	35	வாகைக்கனை	87
பார்தந்த	1	வித்துருமத்	13
பானலங்	7	வேலாவலைய	34
பிடிக்கும்	24	வையகமத்தனை	78

பிழையும் திருத்தமும்

பக்கம்	பிழை	திருத்தம்
	களஅமெக	களஅமெக
	சங்கரநாராயணாரனச் சருக்கம்	சங்கரநாராயணாரன சருக்கம்
6	கானலங்கணணி	கானலங்கன்னி
21	கலாமதிக்கூற்றம்	கலாமதிக்கீற்று வெங்கூற்றம்
26	நிலவிலையம்	நிலவலயம்
31	40 உரை ஏன்	என்
33	கிருபையொடு	கிறுபையொடு
62	பிடித்துத் திரிந்தால்	பிடித்துத் திரிந்து
63	செயல்	செயல
76	குறிப்பு:	
	கிடைக்க என்பர்	கிடைத்ததில்லை என்பர்

O-12 N,5
N69

…CHIVES LIBRARY
109321

காராகை	23	புனைச்சரா	36
செய்யவம்போ	22	பூங்கமுகா	76
சோர்வரு	44	பூவையமா	86
ஞானவர	காப்பு	பெற்றத்தி	61
நகரம்புனை	33	பொரவியந்	26
நஞ்சமனி	4	பொருந்தந்தி	31
நவமணிமா	56	போனக	18
நானவரப்	83	மங்கைக்கு	59
நிலைமெழு	96	மடங்கலை	81
தென்மலைத்	37	மதியாதவ	84
தேனூரக்	3	மயங்கத்தரா	42
தையலருந்	52	மாதரையம்	25
தொடரும்பல	39	மாலைவிரா	38
தொடிகைக்கு	12	முயலகனுக	80
நாரமருகு	57	முன்னிலைங்	15
நிகரால	93	மெல்லியராக	17
நித்தம்பயி	46	மேகத்தளவு	30
நினைவாரி	54	மேவியகல்	41
நேராயனாங்	21	வந்திக்கமல	48
புலவை	85	வரந்தருவார்	94
பித்திருக்கு	20	வரைக்கேகய	82
பெரியாழி	90	வன்னிகரந்	64
பிரதாரவித்	35	வாகைக்கலை	87
பார்த்தந்த	1	வித்துருமந்	13
பின்னலைங்	7	வேலாவலைய	34
பிறக்கும்	[illegible]	வையகமத்தனை	78

பிழையும் திருத்தமும்

பக்கம்	பிழை	திருத்தம்
[illegible]	களஅமக	கஅமக
[illegible]	சங்கரநாராயணரானச் சருக்கம்	சங்கரநாராயணரான சருக்கம்
6	கானலங்கணளி	கானலங்கன்னளி
21	கலாமதிக்கூற்றம்	கலாமதிக்கீற்று வெங்கூற்றம்
26	நிலவிலையம்	நிலவலயம்
31	40 உரை ஏன்	என்
33	கிருபையொடு	கிறுபையொடு
62	பிடித்துத் திரிந்தால்	பிடித்துத் திரிந்து
63	செயல்	செயல
76	குறிப்பு:	
	கிடைக்க என்பர்	கிடைத்தவில்லை என்பர்